
குருமகாசந்நிதானங்களின்

அற்புதங்களும் அருள் வரலாறுகளும்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்
திருக்கயிலையின் தென்முகதரிசனம் செய்தருளல்

தருமபுர ஆதீனம்.



தருமையாதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 472

உ

குருபாதம்

தருமையாதீனம் குருமகாசந்நிதானங்களின்

அற்புதங்களும் அருள் வரலாறுகளும்

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்
திருவுள்ளத்தின்படி வெளியிடப்பெற்றது.

ஆதி பரமாசாரிய சுவாமிகள் குருபூசைத் திருநாள்
சார்வரி – வைகாசி – மூன்றும்நாள்

தருமையாதீனம்

1960

உ

குருபாதம்

குருபரம்பரை வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான சித்திநெறி
காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மேய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழிற்றருமை வாழ்ஞான சம்பந்தக்
குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ.

உ
குருபாதம்

நூன்முகம்

இறைவர் சகள நிட்களத் திருமேனிகொண்டு சதாசிவ மூர்த்தியாய் நின்று அநந்த தேவர்க்கு அருளுபதேசம் புரிய, அது ஸ்ரீ கண்ட ருத்திரரால் நந்தியெம்பெருமானுக்கு உபதேசிக்கப் பெற்றது. அவர் சனகர் சனற்குமாரர், சனந்தனர், சனாதனர், ஆகியவர்களுக்கு உபதேசிக்க, அவர்களுள் சனற் குமாரரால் உபதேசிக்கப்பட்டு வந்ததே, மெய்கண்ட சந்தானம். இப்பரம்பரையில் திருவாரூர் சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் பால் அருள் உபதேசம் பெற்று, குருவாணைப்படி தருமபுரம் வந்து ஆதீன முதற்குரவராக எழுந்தருளி யிருந்த ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களது திருவருள் வழி இயங்கிவருவது இத் தருமையாதீனம். இவ்வாதீனத்தே ஞானபீடத்து எழுந்தருளியிருந்து அருளரசு செலுத்திய - செலுத்து கின்ற குருமூர்த்திகள் சிறந்த அருளாளர்கள்; சிவ ஞான சித்திநெறி வையமெலாம் ஓங்கி உலவத் தமது அருளாற்றலைப் பயன்படுத்தும் திருவருள் வீறு உடையவர்கள். இப்போது 25 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளி அருளாட்சி புரிந்துவருப வர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் இக்குருமூர்த்திகளின் அருள்வரலாறுகளையும், அற்புதங் களையும் தொகுத்தெழுதி வெளியிடவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டார்கள்.

திருக்கயிலாய யாத்திரை புரிந்தருளித் திருக் கயிலாய பரம்பரை என்பதை மெய்ப்பிக்கும் இக் கயிலைக் குருமணியவர்கள் இவ்வரலாற்றை எழுது மாறு அருளிய ஆணையின்படியே, ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் முதுபேரும்புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகர் அவர்கள் இதனைச் செம்மையாகச் செய்து தந்தார்கள். அச்சில் வெளிவராததும், ஆதீன நூலகத்தே கையேட்டுப் பிரதியாக இருந்து வருவதும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் அற்புத வர லாற்றுப் பாமாலையும் இத்துடன் சேர்க்கப்பெற்றுள்ளது.

தமிழன்பர் ஒவ்வோருவர் கையிலும் விளங்க வேண்டிய ஞானப்பனுவலாக விளங்கும் இந்நாள்களில் வெளியிட்டருளுகின்ற ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் திருவடிகளில் அடியேன் மனமோழி மெய்களால் வணக்கம் செலுத்திப் போற்றுகின்றேன். இதனை எழுதிய புலவர் அவர்கட்குச் செந்தமிழ்ச் சோக்கர் திருவருளால் நல்லன எல்லாம பெருக வாழ்த்து கின்றேன். இந்த நூல் ஆதீன ஆதி பரமாசாரியராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசைத் திருநாளில் (16—5—60) வெளிவருகிறது.


ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவடி கள் வாழ்க! திருக்கயிலாய பரம்பரை ஓங்கி வளர்க! வாழ்க உலகேலாம்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்து
அருளாணையின் வண்ணம்,

ஒடுக்கம்,

தருமையாதீனம்,
16—5—60.

வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான்.



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

குருபாதம்

தருமையாதீனம்

குருமகாசந்நிதானங்களின் அற்புதங்களும் அருள் வரலாறுகளும்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டில் நீர் வளமும், நிலவளமும் ஒருங்குமிக்க ஸ்ரீ வில்லிபுத்தூரிலே சுமார் 450 ஆண்டுகட்கு முன்னர், சிறப்பு மிக்க கார்காத்த சைவ வேளாளர் குலத்தில், சிவ பக்தியில் தலைநின்ற சுப்பிரமணியப் பிள்ளை என்பவர்க்கும் அவர் வாழ்க்கைத் துணையாகிய வான்தரு கற்பின் வரந்தரு சிறப்புடைய மீனாட்சியம்மையார்க்கும் தாம் செய்த சிவபூசனைத் தொண்டின் புண்ணியப் பலனால் மங்கள நல்முகூர்த்தங்கூர்ந்த திங்கட்கிழமையன்று குருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்தருளினார்.

தாய் தந்தையர் கழிபேருவகையுற்று அன்னாருக்கு ஞானசம்பந்தன் எனுந் திருப்பேயரிட்டு அழைக்கவும், பதினாரும் ஆண்டிற்குள் தமிழ்மோழி வடமோழிகளிரண்டினும் மிக வல்லுநராய், ஆகம சாத்திரங்களேல்லாம் கற்றுத் தேளிந்து சிவஞானச் சேம்மலாய்த் திகழ்ந்தார்.

இங்ஙனமிருந்து வருங்காலத்தில் ஒருநாள் ஞானசம்பந்தருடைய தாய் தந்தையர்கள், தங்களுடைய ஆத்மார்த்த மூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுளை வழிபடும் அவா மிக்கு மதுரையம்பதிக்குப் புறப்படுங்கால் தம் அருமை மகனாராகிய ஞானசம்பந்தரையும் உடன் அழைத்துச் சேன்றார்கள். சேன்று, அண்ணல் ஆலவாயாரையும் அன்னை அங்கயற்கண்ணியாரையும் வழிபட்டுக்கோண்டு காட்சியின்பத்தில் மூழ்கி அங்கேயே சின்னாள் தங்கியிருந்தனர். பின்னர், தங்களூருக்குத் திரும்பும் நிலையில் தம்புதல்வராகிய ஞானசம்பந்தரையும் அழைக்கவே, அதற்கவர் தாய்தந்தையர்களைப் பார்த்து, 'என் தாய்தந்தையர்கள் இவ்வாலயத்தின் கண்ணே இருக்கையில், அவர்களைவிட்டுப் பிரிந்து உங்களுடன் வாரேன்' என்று பல சாத்திர வாயிலாக அமைதியும் ஏதுவுங்கூற, அவர்கள் ஒருவாறு மனம் தேர்ந்து தேளிந்து மதுரையிலேயே இருக்குமாறு அவரை விட்டு ஸ்ரீ வில்லிபுத்தூர் சேன்றனர்.

பின்னர், ஞானசம்பந்தர் பூவினுக்கருங்கலமாம் போற்றுமரைப் போய்கையிற்குளித்துக் காதற்கசிவோடு

நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு அழகர் ஆலவாயனையும் அங்கயற்கண்ணியையும் வழிபட்டுக் கைதொழுது பரவிப்பணிந்து பன்னாள் வதிந்து வருகையில், ஒரு நன்னாளிலே பொற்றாமரைப் பொய்கைக் கரையிற் சிவனடியே சிந்திக்கும் அடியார்கள் சிலர், சிவபூசனை புரிந்து ஆனந்தக் கண்ணீர் அருவியாகப் பண்ணீடிய பதிகம் பல ஓதுதலைக் காதுபெற்ற பயனாகக் கேட்கலுற்றார். உறவே, அவர்க்கும் அவ் வண்ணம் சிவபூசனை புரிதல்வேண்டும் என்னும் எண்ணம் தழைத்தது. உடன் ஆலவாயார் திருமுன் சென்று நின்று பண்ணிசையால் பணிந்து வேண்டித் தம் உறைவிடம் புக்கு அன்றிரவு துயிலமர்ந்தாராக, 'கடம்பமர் செல்வர்' கனவின்கண் எழுந்தருளி 'ஞானசம்பந்தா! நாம் சிவலிங்க ரூபத்தில் பொற்றாமரைப் பொய்கையின் ஈசானமூலையில் கங்கைக் குள்ளிருக்கின்றோம். காலையில் அங்குச் சென்று மூழ்கி யெடுத்து உன் விருப்பப்படிப் பூசிப்பாயாக!' என்று அருளாணையிட்டு மறைந்தருளினார். ஞானசம்பந்தர் திடுக்கிட்டெழுந்து, என்னே விந்தை! என வியப்புற்றுக் கண்ணுதலின் பாதம் நண்ணும் ஆசையால் ஆனந்தக் கூத்தாடிப் பாடிப் பரவிய வண்ணமாக, வைகறைப் போதிலே பொற்றாமரைத் தீர்த்தத்திற்குச் சென்று நீரில் மூழ்கிக் காணுங்கால், பேட்டகக் கோயிலோடுந் தமது கையில் வந்தெழுந்தருளிய சிவலிங்கப்பெருமானைக் கைப்போதால் ஆர எடுத்தணைத்துக் களிப்புமிக்கூர ஆடிக்கொண்டு சந்நிதானத்திற்போந்து, ஆலவாய்ச் சொக்கரை அலர்விழி அன்புநீர் சொரிய வழுத்தி,

"கண்ணுக் கினிய பொருளாகி யேயென் கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத மேயென்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சோக்க நாயகனே"

என்னும் சோக்கநாதக் கலித்துறையைப்பாடி, "அடியேன் விழைந்த வண்ணமே அருள் செய்தீர்; இனி, இச்சிவலிங்கத்தை வழிபட்டு உய்தற்கேதுவாகிய சிவஞானோபதேசஞ் செய்தருளும் ஞானுசாரியரையும் தோற்றுவித்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பித்து விடைபெற்றுக்கோண்டு தம்மிருக்கையிற்புக்குத் துயில் மருவுவாராயினர். மதிசூடிய அவ்வழகரே மீட்டும் கனவில் தோன்றியருளி "ஞானசம்பந்தா! திருவாரூரின் கண்சேன்று நமது உபதேச பரம்பரையில்வந்த ஞானப் பிரகாசதேசிகரிடத்தில் ஞானோபதேசம்பேற்று நம்மை வழிபட்டு வருவாயாக!" என்று அருளிச்சேய்து, அவ் வண்ணமே திருவாரூரில் ஞானப்பிரகாசனே! சோம வாரத்தன்று உன்மாட்டு வருகிற நமது ஞானசம்பந்த னுக்கு விதிப்படி சிவஞானோபதேசஞ் சேய்து, சிவ லிங்க பூசையும் எழுந்தருளப்பண்ணிவைப்பாயாக!' எனக் கட்டளையிட்டுக் கரந்தருளினர்.

ஞானப்பிரகாச தேசிகர், சோமசுந்தரக்கடவுள் தம்மேல் கருணைகூர்ந்து கனவில் தோன்றிக் கட்டளை யிட்டருளியவாறு திங்கட்கிழமையில் காலையிலேழுந்து போந்து கமலாலயத்தில் நீராடி நாளுஞ் சேய்துவரும் அருள் ஒழுக்கமான சிவபூசாதிகளை முடித்துக்கோண்டு, சிவாலயத்திற் சேன்று, தியாகராசப் பேருமானைக் கண் களிப்பக்கண்டு வழிபட்டுச் சித்தீச்சரத்திலுள்ள தமது

உபாசனுமூர்த்தியாகிய ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தியின் சந்நிதானத்தில் கிழக்கு நோக்கி வீற்றிருந்து, ஞானசம்பந்தர் வருகையை விரும்பி எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். இவர் இவ்வாறிருக்க,

மல்லல் மதுரைப் பெருநகரின்கண் ஞானசம்பந்தர் தமக்குக் கனவில் சோமசுந்தரக் கடவுள் கட்டளையிட்டருளியதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் துயில்விட்டேழுந்து மெய்மயிர்போடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி உள்ளம் நேக்குருகிக் கண்களில் நீராடத் தோத்திரித்து வணங்கி, வைகறையிலேழுந்து சிவாலயத்திற்குச் சேன்று, போற்ருமரைப் போய்கையிலே மூழ்கி நித்திய கருமானுஷ்டானங்களை யேல்லாம் முடித்துக்கோண்டு ஆலவாயரையும் அங்கயற்கண்ணியையும் வழிபட்டு வணங்கி அருள் விடைபெற்ருர். பின்னர், அங்கு நின்றும் புறப்பட்டு வருங்கால், இடையிலுள்ள திருவானைக்காவில் திருவேண்ணுவலுறை சேஞ்சடையப்பரை வழிபட்டும், மற்றும் பல திருத்தளிகளை வழிபட்டும் குறிப்பிட்ட சோமவாரத்தன்று திருவாருரையடைந்தார். கமலாலய தீர்த்தத்தில் மூழ்கி நாளுஞ் சேய்யும் நல்லருளோழுக்கங்களை ஆற்றிக்கோண்டு, சிவாலயம் புக்குத் தோழுது வணங்கிக் குருநாதனுடைய அருட்காட்சி என்று கிட்டுமோவேன ஆசையால் தாழ்ந்து கவர்ச்சியுற்றவராய் வலம் வருகையில் சித்தீச்சரத்தின்கண் எழுந்தருளிய ஆலமர் சேல்வனின் (தக்ஷிணுமூர்த்தி) சந்நிதானத்தில் கிழக்குத்திசை னோக்கிப் பேருங்கருணைத் திறத்தோடும் வந்து மல இருணீக்கியருளும் ஞான ஞாயிறேயேன வீற்றிருக்கும்

குருமூர்த்தியாகிய ஞானப்பிரகாசரைக் கண்டவுடன் தனக்குக் கனவில் உணர்த்தியருளப்பட்ட ஞான குரவரிவரேயெனத் தெளிந்து தாயைக்கண்ட பசுக் கன்றேபோல விரைந்துசென்று திருவடி மலர்களில் வீழ்ந்து வணங்கி வழிபட்டார்.

அதுபோது ஞானப்பிரகாச தேசிகர் ஆராவன்பின் அருளோடும் ஞானசம்பந்தரைத் தம் இருகைம்மலர் களாலும் தழுவியெடுத்து ஞானசம்பந்தா ! அஞ்சற்க !" என்று அபயங்கொடுத்து, சந்நிதானத்தில் வடக்கு முகமாய் அமரவைத்துத் திருவருணோக்கத்தால் ஞான தீக்கை செய்து, தலைமேற்றிருவடிக் கமலஞ்சூட்டி, சிவஞானோபதேசஞ் செய்து சொக்கலிங்க பூசையும் எழுந்தருளச்செய்து கொடுத்தருளினர். அச் சொக்க லிங்கப்பெருமானை ஞானபூசா முறைப்படி வழிபட்டு, 'சொக்கநாத வெண்பா' என்னும் செந்தமிழ்ப் பாமாலை சூட்டியும் தங் குருநாதனுகிய ஞானப்பிரகாச தேசிகரை 'ஞானப்பிரகாச மாலை" என்னும் நற்றமிழ் நூலாற் புகழ்ந்து திருவடிகளில் வீழ்ந்து வணங்கியும் வழிபட்டு நின்றார்.

இவ்வாறுக, திருவாரூரில் ஞானசம்பந்தர் குரு நாதரின் திருவடி நிழலில் வைகிக் குருபணிவிடையை அன்பின் மலர்ச்சியால் ஆற்றிக்கொண்டு வருங்கால், ஒருநாள் சீடர்பலர் புடைசூழக் குருமூர்த்தியோடு கோயில் புக்கு அர்த்தயாம தரிசனஞ் செய்துகொண்டு திரும்புகையில் கைவிளக்குப் பணிவிடை செய்வோன் தூங்கிவிட்டமையறிந்து ஞானசம்பந்தர் தாமே சென்று

கை விளக்கை யெடுத்துக்கொண்டு, இன்று இத்திருப் பணி செய்யும் பேறு கிட்டியதை யெண்ணி மகிழ்ச்சி கூர்வாராய் குருநாதனுக்கு முன்சென்ருர். மடத்தி னுக்குள் புகுமுன் ஞானப்பிரகாச தேசிகர் ஞான சம்பந்தரை நோக்கி 'நிற்க' வேனப் பணித்துத் தாம் உட்சென்று துயில்வாராயினர்.

ஞானசம்பந்தரும் குருநாதனின் அருள் வண்ணப் படி கைவிளக்கைப் பிடித்தவாறே தமக்குபதேசித் தருளிய சிவஞானுேபதேச நிலையிலேயே விடியுங்காறும் நின்ருர். அன்றிரவு, பெருமழை பொழியா நின்றும் திருவருளுைக்கால் அவர் திருமேனியில் ஒரு துளியும் படாது ஒரு கஜதூரம் வரைச் சுற்றிலும் சிறை யமைத்ததுபோல் மண்ணகத்தும் நீர் புகாமல் நின்றது. மறுநாள் வைகறைப்போதில் சாணந்தெளிக்க வந்த குருபத்தினியார் அப்பெற்றிமை கண்டு மனங்கவன்று வியப்பிலாழ்ந்தாராய் உள்ளே திரும்பியோடி ஞானப் பிரகாசருக்கு அறிவிக்க, அவர் சட்டென எழுந்து விரைந்து ஓடிவந்து பார்த்துத் திருவருளின் ஆற்றலைச் சிந்தித்துக் கண்களில் நீர்சோர ஞானசம்பந்தருழைச் சென்று தம் இருகைகளாலும் இறுகப்புல்லிக்கொண்டு "அப்பனே! நீர் நாமும் வணங்கும் குருநாதராகி விட்டீர்" எனத் திருவாய் மலர்ந்து, "இனி நீர் உமது விருப்பின்படி வேண்டிய விடத்திற் சென்றிருந்து கொண்டு உம்மை வந்தடைந்த பக்குவர்களுக்குச் சிவஞானுேபதேசஞ்செய்து சமய பரிபாலனம் நடாத்தி வருவீராக" எனக் கட்டளையிட்டருளினுர். கேட்ட

குருஞானசம்பந்தர் மனம் மாழ்கிப் பதைத்து “ அடியே னேங்ஙனம் தேவரீரை விட்டுப் பிரிந்திருக்க வியலும் ” என்று பலவாறு விண்ணப்பித்து நின்று “அடியே னுக்குச் சுதந்திர முண்டோ ? ” எனும் கருத்தினை உட்கோண்ட,

“ கனக்கும் போதிக்கு மேருதுக்குந் தன்னிச்சை கண்ட
துண்டோ
வேனக்கு முடற்கு மேனதிச்சை யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுண் ஞானப்ர காச சிதம்பரவின்
றுனக்கிச்சை யேப்படி யப்படி யாக வுரைத்தருளே. ”

என்னுங் கட்டளைக் கலித்துறையால் தம்முடைய கருத்தைத் தேரிவித்துக் கோண்டார். அதனைக் கேட்டருளிய ஞானப்பிரகாச தேசிகர் உளங்கனிந்து ‘ ஞானசம்பந்தரே ! நமதூருக்கு வடக்கே இரண்டு யோசனை தூரத்துக்கப்பாலுள்ள மாயூரத்திற்குக் கிழக்குத் திக்கில் ஒரு குரோசத்துக்குள், எமதருமனால் வழிபடப்பட்டதும், அகத்திய முனிவர் முதலிய முனி புங்கவர்களால் வழிபடப்பேற்றதுமான வில்வாரண்ய மாகிய தருமபுரத்தைச் சேன்றடைந்து பக்குவிகட்கு ஞானோபதேசஞ்சேய்து சைவசித்தாந்த சமய பரிபாலன பீடாதிபதியாய் வாழ்வீர் ’ என்று ஆணைதந்தருளினர்.

அவ்வண்ணமே குருஞானசம்பந்தரும் திருவாரூரை அரிதின் நீங்கி, ஸ்ரீவாஞ்சியம் முதலிய தலங்களை வழிபட்டுக்கோண்டு தருமபுரத்தையடைந்து அங்கிருந் தருளும் ஸ்ரீ தருமபுரீசுவரரையும் அபயாம்பிகையையும் தரிசித்து வணங்கினர். அக்கோயிலின் மேற்புறத்தி லுள்ள கூவிளந்தோப்பில் ஓராசிரமம் அமைத்து அதில்

வதிந்துவந்தனர். அங்குச் சோக்கநாதப்பேருமானை எழுந்தருளுவித்துப் பூசித்தும், தம்மையடைந்த பக்குவர் கட்கு ஞானதீக்கை புரிந்து ஞானோபதேசம் செய்தும், பற்பல அற்புதங்களால் திருவருளை விளக்கிக்கோண்டும் எழுந்தருளி இருந்தனர். சிவபோகசாரம், முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதிதசகாரிய அகவல், சோடச கலாப் பிராசாத ஷட்கம் முதலிய அனுபவ நூல் களாகிய ஞானசாத்திரங்களையும் பல தோத்திர நூல் களையும் செய்தருளினர்.

அகத்தியருடைய மாணுக்கர்களாகிய முனீந்திரர் கள் ஆங்குள்ள ஸ்ரீ தருமபுரீசுவரருக்கு நித்திய நைமித்திக பூசனை முதலியவைகளை நடாத்திக்கோண்டு இருந்தார். அன்னோர் ஞானசம்பந்த தேசிகரது பேரருட் குணங்களைக்கண்டு பேருமகிழ்வு கோண்டவர் களாய்த் தமக்குரிய ஆசிரமங்களையும் சிவாலயத்தையும் அவரிடம் ஒப்புவித்தனர். அவைகளைக் காத்தோம்பி வர இரசவாத முதலிய பல சித்திகளையும் உபதேசித்து, “ எங்களைப்போலவே இவைகளை நீயிரும், உமக்குப்பின் வரும் சந்ததியாரும் பரம்பரையாய்ப் பரிபாலித்து வருவீர்களாக ” என்று ஆசீர்வதித்துத் தம்முடைய இருக்குமிடஞ் சேன்றனர்.

ஞானசம்பந்தர் அவ்வண்ணமே சிவத்தளியையும் சிவனடியார்களாகிய பூசுநீறுபோல் உள்ளும் புனிதர் களையும் தமது பேருங்கருணைத் திறத்தாற் காத்தோம்பிச் சிவாலயத் திருப்பணி, திருவிழா முதலியவைகளை

நடாத்திக்கொண்டு வந்தார்கள். ஒரு சமயம் தில்லைக் கூத்தப்பிரானைக் கண்டு வழிபடும் அவா மிக்கு அவண் போந்தருளி ஆயிரக்கால் மண்டபத்திலே இரவும் பகலுமாய் ஆனந்த நிட்டை கூடியிருந்தனர்; ஒருநாள் ஆடவல்லாரின் அருட்பாங்கால் சிவகாமியம்மையார் அன்பர்க்கு அருளிச்செய்யும் விருப்பில் நள்ளிரவிலே தமது பள்ளியறையில் வைத்துள்ள வெள்ளி வள்ளத்தி லுள்ள பாயசத்தையும் பொன்வள்ளத்திலுள்ள திரு வமுதத்தையும், கங்கை நீரையும் கொடுபோந்து அளித் தருளினர். இக்குருமூர்த்திகள் ஞானநாட்டத்தால் ஆவும் புலியும் தம்முள் மாறின்றி ஒரே குளத்தில் நீர்பருகி, ஒரே பொழிலிற் களித்து விளையாடும்படிச் செய்தருளினர்*. இவ்வண்ணம் ஞானவரசு ஓச்சிய குருமூர்த்திகள் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்துக்கு மேற்கே திருக்கோயில் கட்டிச் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார். தமக்கு அண்மையில் பரிபூரணதசை வருதலைத் திருவருளுணர்த்த வுணர்ந்து அச்சிவலிங்கப் பெருமான் திருவடி நீழலிற் சமாதிகூடத் திருவுளங் கொண்டு தமது அடியார்களில் ஆனந்தபரவசருக்கு ஞானோபதேசஞ் செய்து, தமது பீடாதிபத்தியத்தையும்

---

* குருமூர்த்திகளது திருவுருவப்படத்தில் இவ்வுண்மை புலப்பட வரையப்பெற்றிருப்பதைக் காணலாம்.

"புலியுமோ ராவும் நட்போடுவாவி புகுந்துநீ ருண்டுடனடந்து
நலிவிலா வகையி லோர்பொழிற் சேக்கை நயந்துவாழ்ந் திருந்தன கண்ட
வலியவரன்று முதலுபசார வகையினி னிற்கவே செய்தாய்"
... ...

என்பதும் அதற்குச் சான்று.



தருமையாதீனம் உஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருமூர்த்தம்

சோக்கலிங்க பூசையையுங் கொடுத்தருளி, "நீர் நமது பீடத்திலிருந்து கொண்டு ஞானோபதேசஞ் செய்து சோக்கநாதரைப் பூசித்து, சிவாலயத்தையும் சைவ சமயத்தையும் பரிபாலித்து வருவீராக" எனப் பணித்தருளிச் சிவசமாதியெய்தினர்.

2. ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள்

ஆனந்தபரவசர் அருள் ஒழுக்கத்தில் தலைநின்ற பெருந்துறவியாதலான் குருவருள் ஒன்றையே நாடி நின்றார். அதை எய்தியதும் சிவஞான மிக்கோங்கியதால் ஆனந்தக்கண்ணீர் ததும்பத் தம் குருவின் சமாதி முன்னிலையில் வீழ்ந்து பரவி வணங்கினர். அதன் மேற் பக்கலிற் சென்று, தம் குருமூர்த்தியின் திருக்கோயிற் சிகரத்தைத் தரிசித்தவண்ணம் கிழக்கு முகமாயிருந்து, சமாதிகூடி, சிவானந்தாத்வைத முத்தி நிலையெய்தினார்.

3. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள்

ஆனந்தபரவசர் முத்தியெய்தியதைக் கண்டு உணர்ந்த பெரிய அன்பின் அடியார்கள் அனைவரும் 'பிறவிப் பெருங்கடல் கடக்கப் புணையருளும் குருமூர்த்தியின் திருவடிமலர் நீழலை யிழந்தோமே' எனக் கவற்சியுற்றனர். சமாதி கூடியிருந்தருளும் குருஞான சம்பந்த தேசிகரது சந்நிதானத்தையடைந்து 'தேசிகர் மீளவும் எழுந்தருளிப்போந்து வாழையடி வாழையென வரும் ஒழுகலாற்றினையும், அடியேங்களையும் ஓம்பியருளல் வேண்டும்' எனக் கசிந்துருகி வேண்டினர்.

ஞானதேசிகரும் அருளிச்செயலால் உணர்ந்து, மீட்டும் சமாதியினின்று எழுந்தருளித் தம்மடியார்களில் ஒரு வராகிய சச்சிதானந்தருக்குத் திருவடிமலர் சூட்டி ஞான நீராட்டி, சொக்கநாத பூசையையுங் கொடுத்தருளினார். அவ்வாறு செய்தும் அவருக்கு ஞானசமாதி கூடி வாராமையான் குருஞானசம்பந்தர் திருவருணோக்கஞ் செய்து,

தானந்த மாதிநடு வில்லா தோங்கும்
சச்சிதா னந்தம்யந் தானே யாய
ஆனந்த பரவசனைக் கண்டுங் கண்டு
மந்தந்தோ பரகதியை யறிந்தீ ரில்லை
மானந்தான் வடிவாகி நிற்ற லாலோ
மலமாயை கன்மமிவை மடியா தாலோ
ஞானந்தா னுமதுளத்தி லுதியா தாலோ
நாமறியோ முமதுமய னவிற்று வீரே.

என்ற கன்னலின் இனிக்க உருக்கு தமிழ்ப்பாடலைத் திருவாய் மலர்ந்தருளவே அந்நிலையினை யெய்தினர்; அஃதுணர்ந்து மகிழ்வுகூர்ந்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த மூர்த்திகள் 'இனி, நீர் நமது பீடாதிபதியாய் வீற்றிருந்துகொண்டு, செந்தமிழ்ச் சொக்கரை வழிபட்டு, பற்றற்று பற்றற்றான் பற்றினையே பற்றிநிற்கும் பக்குவி கட்குச் சிவஞானோபதேசஞ்செய்து வருவீராக' என அருளாணையிட்டு, வைகாசித்திங்கள் அமரபக்க சப்தமி நன்னாளிலே சிவசமாதி கூடினார்கள்.

சச்சிதானந்த தேசிகரும் குருநாதன் பணித்த வண்ணம் சின்னாள் சமயச் செங்கோலோச்சித் தமது

அடியார்களுள் ஒருவராகிய மாசிலாமணி தேசிகருக்கு ஞானோபதேசம் பண்ணியருளி முத்திப்பேற்றை எய்தி னார்கள்.

4. ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள்

சச்சிதானந்த தேசிகர்பால் அருளுபதேசம்பெற்ற மாசிலாமணி தேசிகர் ஞானவிருக்கையிலெழுந்தருளி அருட்செங்கோல் ஒச்சி வருங்காலை ஒருநாள், நடையரு அடியார்கள் பத்திமையாற்செய்த பாதபூசை மலர்கள் திருநேறிய திருமுறை ஏடுகளின்மீது இருப்பக் காட்டியருளினார்கள். தமது தவவலிமையினால் தம் அன்னையாருக்கு அத்வாசோதித்து முத்திப்பேறு அளித் தருளினார்கள். அரவம் தீண்டியிறந்த ஒருவனை உயிர்ப்பித்தருளினார்கள்.

இங்ஙனமாகப் பற்பல அற்புதங்கள் ஆற்றித் தம் அடியார்கட்குக் குருபத்தி சிவபத்திகளைப் பெருக்கி வந்தார்கள். சேந்திற்பதி புரக்கும் சேவ்வேளின் தண்ணருள் பேற்ற வியத்தகு புலமை ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கு ஞானதீட்சை செய்து, காசி சேன்று சுத்தாத்வைத சித்தாந்த சைவ சமயஸ்தாபனம் தோற்றி வருமாறு பணித்து ஆட்கோண்டருளினார்கள். இன்பத் தமிழில் முத்திநிச்சயப்பேருரை. ஞானவரண விளக்கம் முதலிய நூல்களை ஆக்கியருளிய தண்டமிழ் முனிவ ராம் வெள்ளியம்பலவாணருக்குச் சமய, விசேட தீட்சை கள் சேய்து சைவ சந்நியாசமும் கோடுத்தருளினார்கள். பின்னர், மரபு வழிவரும் ஞானசம்பந்த தேசிகருக்கு

ஞானுேபதேசம் செய்தருளி ஞானவிருக்கையிலமரச் செய்து சுத்தாத்வைத சைவ சித்தாந்த முத்தியை அடைந்தனர்.

5. ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

ஞானசம்பந்த தேசிகர் ஞானபீடத்தில் எழுந் தருளியிருந்து அருளாட்சி நடாத்தும் ஞான்று, மேற் கூறப்பெற்ற தண்டமிழ் முனிவராம் வெள்ளியம்பல வாண முனிவர்க்கு ஞானதீக்கை செய்தருளினுர்கள். பின்னுெருஞான்று, தென்னக யாத்திரை செயவிரும்பிப் போந்து பல தளிகளேயும் வழிபட்டுக்கொண்டு, மந்தியும் கடுவனும் ஆலும் மரம்பயில் வளமுடைக் குற்றுல மலேயிலெழுந்தருளியிருக்குங்காலே, ஆங்கே ஆற்றில் வெள்ளம் சிறைதோட்டுச் சென்றதால் மக்கட்குப் பெருந்துன்பம் உண்டாயிற்று. போறுக்கலாற்ருத மக்கள் யாவரும் குழுமிக் குருநாதரிடம் போந்து, 'சுவாமி! எங்கட்குற்ற இவ்விடுக்கணே நீரே களேந் தருளல் வேண்டும்' என விண்ணப்பித்துப் பணிந் திறைஞ்சினர். அவர்கள் வேண்டுகோட்படியே, சுவாமி களும் திருவருள்கூர்ந்து நீர்வெள்ளத்தைக் குறைத் தருளினுர்கள். மக்களும் புத்துயிர் பேற்ருற்போல் துன்பம் நீங்கி இன்பக்கடலுள் மூழ்கினர். இவ்வாறு திருவருட்பேற்றியைப் பல்லாற்ருனும் விளக்கிக் கோண்டிருந்து இறுதியில் திருஞானசம்பந்த தேசிக ருக்கு ஞானுேபதேசம் செய்து தமது திருவருளிருக்கை யைக் கோடுத்தருளி முத்திநிலே யெய்தினுர்கள்.

6. ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

இக்குருமூர்த்திகள் காலத்தில் பதினறுரேடுக்கம்* என்பது நனிசிறப்பாக விளங்கியது. அதில் பல அடியார்களும் இரவு பகல் பாராத இயல்பினராய் நிட்டை கூடியிருந்தனரேனவும், அவர்கள் பூசனைக்கு வேண்டும் போருள்களும், உண்டியும் அவ்வக்காலை அதற்கேன வகுத்த ஒருசிறு வாயில் வழியாக அளிக்கப்பேற்றன வேனவும் அறிய அவ்விடம் இன்றும் இருக்கிறது.

முப்போருளின் உட்போருளுணர்ந்த முனிவராம் சம்பந்த சரணலயரும் இப்பேரியார் ஞான தேசிகர்பால் அருளுபதேசம் பேற்று உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மேய்ஞ்ஞானமுமுடையராய்த் திகழ்ந்தனர்.

இவர்கள், அடியார்களுடைய வேண்டுகோட்கு அருள்தந்து தக்கண யாத்திரை சேய்யப் புறப்பட்டருளினர்கள். அக்காலை, சேல்லும் நேறியிற் பல தளிகளையும் தோழுது வணங்கித் தூமலர் தூவித் திருநேல்வேலிச் சிந்துபூந்துறை மடத்தில் தங்கினர்கள். அவ்வூரில் அறச்சாலை மடம் என்ற ஒன்று திகழ்ந்தது. அதற்குத் தலைவராக ஒரு புலவர் இருந்தார். அவர் கற்பவை கற்றுத் துறை போகியவல்லுநர்; தில்லைக் குகை

---

* பதினறு கலைகளையும் அடக்கியிருந்து யோகம் சேய்யுமிடம். இன்றும் அது ஸ்ரீ சோக்கலிங்கப் பேருமான் திருத்தளியின் வடக்குத் திருச்சுற்றில் அமைந்துளது.

மடத்தைச்சார்ந்தவர். அதுகாலை அந்தக் குகைமடத்துத் தலைவராக இருந்தவர் ஞானப்பிரகாசர் என்பர். அவர் ஆன்மானந்தவாதி, ஆகவே, அவரிடம் இப்புலவர் உபதேசம்பெற்ருர். அதனுல் மனவமைதி பேறவில்லை. பின்னர், தருமையாதீன முதற்குரவராகிய ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் அருளிச்செய்த முத்திநிச்சயம் எனும் நூலுக்கு ஒரு மறுப்புரையும் எழுதலானுர். என்ன வேழுதியும் மனவமைதி பேறக்கூடாமையால் அலைய லுற்றனர். பண்டு செய்ய புண்ணியப் பயத்தால் சிந்துபூந்துறையிலே இக் குருமூர்த்திகளைக் காணும் பேறுபெற்ருர். இக் காட்சியே அவருக்கு மனவமைதி இன்பத்தை யளித்தது; உள்ளுவகையும் முகமகிழ்ச்சி யும் எய்தி, திருவடிப்போதில் வீழ்ந்து வணங்கி ஞானுபதேசம் பெற்ருர். குருநாதரும் அப் பேரும் புலவருக்குத் தமிழாகரர் எனும் தீட்சைப் பெயரிட்டு ஆட்கோண்டருளினுர்கள்.

இங்குச் சின்னுள் தங்கியிருந்த பின்னர்த் திருக் குற்ருல மலை வழிபாட்டிற்கு எழுந்தருள விழைந்து செல்வோர், வழியில் வேள்விமலையை அடைந்து, ஆங்குள்ள தமிழ்முருகன் வழிபாட்டிற்குச்சென்ருர்கள். அவன் திருமுன்னின்று இறைஞ்சுங்கால் வள்ளி யம்மையின் திருவுரு இலக்காகவில்லை. ஆதலால், ‘இங்கு வள்ளித்தாய் இல்லையோ’ என மனம் மாழ்கிக் கூறினர். வள்ளியம்மை நாயகியும் ‘ இதோ இருக்கி றேன் ’ என்று திருமேனி வளைந்து காட்சி அருளினர். இந்நிகழ்ச்சியை விளக்கும் அருமைத் தமிழ்ப்பாக்கள்

சான்று பகரும்:- " எழில் வேள்வி மலையிலோர் அம்மை யேங்கேயென்றியம்பியே திருமுனிற்குஞ், சம்பந்தனுக் கருள்சேய் என்று வள்ளிக்கருள்சேய் சைவ நாயகன் " என்ற க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்ப் பாடற் பகுதி யோன்று. மற்று, " வள்ளியம்மை இல்லையோ வேன்னவவள் சிரத்தை நீட்டி, வையம் அறிந்திட விருக்கிறேன் என்ற மோழிகேட்டு மகிழ்ந்து நின்ற, துய்யவனுந் தருமைவரு திருஞானசம்பந்தன் " என்ற தனிப்பாடற் பகுதியோன்று. இவ்வாறு வணங்கிப்பரவி உள்ளம் நேக்குருகிய குருமூர்த்திகள் திருக்குற்ருல மலையை அடைந்தார்கள்.

பின்னர், திருவம்பல தேசிகரிடத்தில் தமது ஞான இருக்கையை ஒப்புவித்து 'நமது பரம்பரையை வளர்த்து வருவாய்' எனக் கட்டளையிட்டருளி முத்திப் பேறு எய்தினர்.

7. ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள்

திருஞானச்சம்பந்த தேசிகர்பால் அருளுபதேசம் பேற்ற திருவம்பல தேசிகர் அருட்சேங்கோலோச்சி வருநாளில் மூவலூர் சுப்பராயச் சேட்டியாரேன்பார் காலஞ்சேன்ற தம் அன்னையாருக்கு ஆற்றவேண்டிய இறுதிச் சடங்குகளைச் சேய்து முடித்து இக்குருமூர்த்தி கள்பால் வந்து வணங்கித்தோழுது " தாயினை வீடு பேறுவித்தல் புதல்வரது கடனுதலின் அதற்கு அடிகள் அருள் புரியவேண்டும் " என விண்ணப்பித்தார்.

குருமூர்த்திகளும் ஞானநோக்கால் அவ்வான்மா சேட்டியாருடைய மனைவியின் கருப்பத்திலுற்றிருப்பதையறிந்து, "உமக்கு மகவு வேண்டுமா? தாய் வீடு பேறுதல் வேண்டுமா" என்று வினவியருளினர். அதற்குச் சேட்டியார், "அடியேன் முதலில் வேண்டுவது தாய் வீடுபேறுதலே" என்று பணிந்து தெரிவித்தனர். குருமூர்த்திகளும் "அங்ஙனமே செய்வோ" மெனத் திருவுளங்கொண்டு திருமஞ்சனம் முடித்து ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டு. அவ்வான்மாவைக் கொணர்ந்து தீக்கைசெய்து வீடுபேறு அடைவித்தருளினர்

பின்னொருநாள், தஞ்சை மன்னன் கடலாட விழைந்து தானைவெள்ளம் புடைசூழ, காவிரிப்பூம் பட்டினம் நோக்கிச் செல்லாநின்றான். வழியில், திருத்தருமபுரம் அணுகிற்று. ஆங்கே கோயில் கொண்டருளும் ஞானபுரீசுவரருக்கு அர்த்தயாம பூசை நிகழ்ந்தது. அடித்த மணியோசை காதைத் தோட்டது. வழிபாட்டில் ஈடுபாடு மிக்க அவன் ஊர்தியினின்றுமிறங்கி மனத்தினால் வணங்கித் தொழுதுப் பின்னர் ஊர்தியிலேறிச் செல்லலாயினன். அதுகாலை அங்கிருந்த சிலர் "சூத்திர சமாதியைத் தாங்கள் வணங்கியதால் பாவத்திற்குள்ளானீர்கள். ஆதலால், அதற்குக் கழுவாய் தேடிக்கொள்ள வேண்டும். அதுவேயன்றி, ஏனையோரும் இக்குற்றத்திற்கு ஆளாகாதவாறு இவ்வாலயத்தை இடித்து விடுதல் நலம்" எனக்கூறினர். இதுகேட்ட மன்னனும் குருமூர்த்திகளது திருவருள் பேறுங்காலம் அணித்தே வருதலாற்போலும் தேர்ந்து

தேளியாது மதிமருண்டு ஏவலரைக் கூவியழைத்து ஆலயத்தை இடிக்கும்படிப்பணித்து அப்பாற்சென்ருன். ஏவலர்களும் ஆலயத்தை இடிக்கத் தலைப்பட்டனர். அதுகண்ட அடியார் குழாங்கள் விரைந்து ஓடிக் குருமூர்த்திகளிடம் ஓலமிட்டுத் தெரிவிக்க, குருமூர்த்திகள்,

"ஈசன் பலகீன னென்றக்கா லாலயத்தின்
மோசம் வந்ததென்று மொழியலா - மீசனே
யாக்குவது மாக்கி யழிப்பதுவுந் தானுனல்
நோக்குவதேன் யாம்பிறரை நோந்து."

என்று பதைத்து வந்த அடியார்கட்குப் பாவின் மூலம் ஆறுதல் கூறியருளினுர்கள். எம்பெருமானும் தமது கூத்தொலியினைக் கேட்பித்துத் திருவருள் பாலித்தார்.

அவ்வொலியினைக் கேட்ட குருமூர்த்திகள் இறைவன் திருவருட் கருணையை வியந்து போற்றிச் சந்நிதானத்தில் நின்று,

"தேசஞ் சிவாலயங்கள் சேர வலையவொரு
மோசம்வந்த தையோ முதல்வனே — தேசத்து
மன்னைவெறுப் பேனே வருவினையை யூட்டுவிக்கும்
உன்னை வெறுப் பேனே வுரை"

என விண்ணப்பித்துத் திருவைந்தெழுத்தை உச்சரிக்க, இருப்புக்கோல்படு மிடந்தோறும் குருதிபெருக அரசனுடைய ஏவலர்கள் மூர்ச்சையுற்று வீழ்ந்தனர். நகர் எல்லையைக் கடந்து சென்ற அரசனுக்கோ கண்ணொளி

மழுங்கிற்று. உடனே அரசன் தன் சிந்தையில்லா வறிவை நோந்து ஆலயத்தை யிடிக்கும்படிக் கேட்டுக் கொண்ட மதியிலிகளை நோக்க, அவர்களும் வாளா ஊமையராய்த் திகைத்து நின்றார்கள். அதுபோதே மன்னவன் தனது மதியின் குற்றத்தையுணர்ந்து மீட்டும் தருமபுரமடைந்து தன் ஏவலர்களின் நிலையைப் புரிந்து கொண்டு மடாலயத்தினுட்புக்கு, குருமூர்த்திகளின் திருவடிகளில் வீழ்ந்து தொழுது, "எம்மானே! பிழைத் தவை பொறுத்தருளல் வேண்டும்" எனப்பரவி இறைஞ் சினான்.

குருமூர்த்திகளும் அம்மன்னவனின் அன்பிற்கிரங்கி இறைவன் அருள்புரிவான் எனத் திருவுளம்பற்றி அவ னோடு ஆலயத்திற்கு எழுந்தருளினார்கள். ஆலயம் புக்க மன்னவன், "இறைவனை வழிபடற்குக்கண்ணொளி யில்லையே எங்ஙனம் காண்பேன்" என்று கவலவும், குருஞானசம்பந்தர் அருளால் ஒருகண் விளக்கமுற்றது. ஏவலர்கள் கீழே வீழ்ந்து கிடப்பதையும், கோல்பட்ட இடங்களில் குருதி பெருகுவதையும் கண்டு குருமூர்த்தி களைப் பரவி வேண்டக் குருமூர்த்திகள் திருநீற்றினைத் தெளித்தருளினார்கள். உடனே குருதி பெருகுவதும் நின்றது. ஏவலர்களும் எழுந்து குருமூர்த்திகளை வணங்கி நின்றார்கள்.

பின்னர், அம்மன்னவன் காவிரிப்பூம்பட்டினத்தில் சென்று கடலாடித் தருமையின் தென்கீழ்த்திசையில் குடிலமைத்துக்கொண்டு தன்பரிவாரங்களுடன் தங்கி*

---

*தங்கிய இடம் மன்னன்பந்தல் என வழங்கப்படுகிறது.

இறைவழிபாடு செய்து வருங்கால் ஒருநாள் குருமூர்த்திகளிடம் போந்து, "சூத்திரர்களுக்குச் சந்நியாசம் பேற அதிகாரமில்லை" என்று சிலர் கூறி அடியேனை மயக்கிவிட்டார்கள். அதன் உண்மைப் போருளை உணர்த்தியருள வேண்டும்" என விண்ணப்பித்துக் கோண்டனன். குருமூர்த்திகள் பல பிரமாணங்களால் அவன் ஐயத்தை நீக்கி, வருணச்சிரம சந்திரிகை† என்றதோர் நூலும் இயற்றியருளினர்கள். 'சந்நியாசத்தில் அதிகாரமில்லை என்று கூறியவர்களும் வெட்கித் தலைகுனிந்தனர். மன்னவன் ஒரு மண்டலம் வழிபாடு செய்து முடித்தவுடன் குருவருளால் மற்றொரு கண்ணும் ஒளிபேற்றது. வாய்பேசா ஊமையரும் பேசலுற்றனர் அதனால், மன்னவன் உவகைகூர்ந்து தான் முதன் முதலில் வழிபட்ட அர்த்தயாம பூசையை எண்ணி அது சிறப்புற நிகழவேண்டிச் சில நிலங்களையளித்து விடைபேற்றுச் சென்றான்.

பின்னர், அம்மன்னவனின் அமைச்சராகிய கோவிந்த தீக்ஷிதரேன்பார் இவ்வியத்தகு சேயல்களைக் கேள்வியுற்றுத் தருமை வந்து குருமூர்த்திகளைக் கண்டு தோழுது வணங்கி, திருச்சத்திமுற்றத் திருக்கோயில் திருப்பணி சேய்யுங்காலத்தில் ஆங்கு ஓர் மடம் அமைத்துக் குருமூர்த்திகளை எழுந்தருளியிருக்கச்சேய்தும் திருவையாற்றில் பூசமண்டபம் முதலியவற்றைத் திருப்பணி சேய்யுங்கால் அங்கு எழுந்தருளுவித்தும், தோண்டுபல ஆற்றிச் சின்னாள்

†இந்நூல் இவ்வாதீனத்தில் அச்சிடப்பேற்றுள்ளது.

உடனிருந்து பின்னர் விடைபெற்றுச் சென்றார். அஞ்ஞான்றே, திருக்கூட்டத்தடியார்களுள் ஒருவரைக் கொண்டு திருவையாற்றுப் புராணம் இயற்றுவிக்கப் பட்டது.

இக்குருமூர்த்திகள் சிவஞான பாநுவாய் விளங்கி யிருந்து தம்மடியார்களுள் ஒருவருக்கு ஞானபிஷேகம் செய்து அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் எனத் திருப் பெயர் சூட்டிப் பீடத்தில் இருக்கச்செய்து முத்திப்பேறு எய்தினர்.

8. ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள்

இவர்கள் தேன்னாட்டு யாத்திரை செய்ய விழைந்து பல தலிகளையும் வழிபட்டுக்கொண்டு கற்குளமாநகரில் எழுந்தருளியிருக்குங்காலை, அத்தலத்திலுள்ள சிவ சிதம்பரம்பிள்ளை யென்பார் ஞான தேசிகரைத் தரிசித்து வணங்கிக் குருபூசை மாகேசுவர பூசை, பட்டணப் பிரவேசம் முதலியன சிறப்புக்கேழும நடாத்தி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிகளைக்கண்டு பொறாத சிலர், மலடி யான ஒரு பேரிளம் பெண்ணைக் குருமூர்த்திகளிடம் அனுப்பி மகப்பேறு வேண்டுமென்று விண்ணப்பிக்கச் செய்தனர். அவ்விண்ணப்பத்தைத் திருச்செவிசாத்திய குருமூர்த்திகள் அப்பெண் வந்த வரலாற்றை ஞானத்தா லுணர்ந்து "நீ விரும்பியவாறே ஆகுக" என அருளிச்

செய்து பரிகலசேடத்தை அளித்தருளினார்கள். அப் பெண்ணும் அதனையேற்று உண்டு மகிழ்வோடு இல்லம் சென்றனள். சிவசிதம்பரம் பிள்ளை வேண்டு கோட்கு இணங்கிச் சின்னாள் அங்கிருந்து, பின் தென் னாட்டு யாத்திரையை முடித்துக்கொண்டு தருமைக்கு எழுந்தருளினார்கள் இக் குருமூர்த்திகள்.

பரிகலசேடமுண்ட அப்பெண் சின்னாட்களில் கருவுற்று ஓர் ஆண்மகவைப்பெற்று, அக்குழவிக்கு அழகியசிற்றம்பலப் பரிகலம்' எனத் திருப்பெயரிட்டு, மகனுடன் கணவனையும் அழைத்துக்கொண்டு தரு மைக்கு வந்து ஞானதேசிகரைப் பணிந்து பரவி திரு வருள் பெற்றுச்சென்றனள்.

இவ்வாறு பல செயற்கரிய செயல்களை நிகழ்த்திக் கொண்டு ஞானபானுவாய் எழுந்தருளியிருந்த அழகிய திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள் சோணாட்டுத் தலங்களை வழிபட்டுக் கோட்டூருக்கு அருகில் வருங்கால் பரிபூரணநிலை அடையப்போவதை உணர்ந்து தமது ஞானபீடத்தையும் சொக்கநாதர் பூசையையும் மரபு வழிவரும் திருநாவுக்கரசு தேசிகருக்கு அளித்து அத்தலத்திலேயே முத்திநிலை யெய்தினார்கள்.

9. ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள்

இக் குருமகாசந்நிதானம் அருட்செங்கோல் ஓச்சி வருங்கால் ஒருநாள், வழிபாட்டு எண்ணம் மீக்குப் புள்ளிருக்கு வேளூருக்குச் சென்று ஸ்ரீ செல்வமுத்துக் குமார சுவாமியை வழிபட்டார்கள். அவ்வமயம்,

இறைவன் திருமுன்னர்த் தோங்கவிடப்பட்டிருந்த திரை திருவருளால் சுருண்டு மடங்கியது. இதுகண்ட குருமூர்த்திகள், இச்செயல் பெருமான் தம்மீது காட்டிய கருணையேயென வியந்து சிந்தையில் மகிழ்ந்து திருவருளனுபவத்தில் திளைத்தார்கள்.

வைணவமகன் ஒருவன் இக் குருமூர்த்திகளின் முன்நின்று திருமாலே பரம்பொருளென்று தருக்கி உரையாடவே, குருமூர்த்திகளின் திருக்கண் நாட்டத்தால் ஊமையாயினன். உடனே வைணவன் தான் இழைத்த தவறுணர்ந்து சுவாமிகளது திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கிப் பரவினன். சுவாமிகளும் கருணை கூர்ந்து அவ்வைணவனுக்குத் திருவெண்ணீறு அளித்து ஊமை நீக்கி, தமது அடியார்களைக்கொண்டு சைவ சமயத்தின் உண்மைகளையும் ஒழுகலாற்றையும் கற்பிக்கச் செய்து தொண்டு கொண்டருளினர்கள்.

பின்னர் அங்கு நின்றும் நீங்கித் தருமை மடாலயத்திலெழுந்தருளி இருக்குங்காலத்தில், ஆறறிவுடைய மனிதனேயன்றிப் பறவை முதலியனவும் அஞ்ஞானத்தால் போரிட்டு மாளுவதைக் கண்டருளினர்; பூனைகள் கிளிகளுடனும், குயில்கள் செம்போத்துடனும், பாம்புகள் எலிகளுடனும் அஞ்ஞானத்தினல் போர்புரிந்துகொண்டு துன்புறுதல் கண்டு திருக்கடைக்கண் சாத்தி, அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தையருள, உடனே அவை யாவும் பகைமை நீங்கித் திருவடிகளில் வந்து அடைக்கலம் புகுந்தன. இஞ் ஞானதேசிகர் திருவடி

தீக்கையும் புரிந்து அவைகளைச் சிவகதியிற் சேர்த்து அருளினார்கள.*

இக்குருமூர்த்திகளின்பால் தேன்களந்தைப் படிக்காசுப் புலவர் பெருமான் சைவ சந்நியாசம் பெற்றுப் பதினேருடுக்கத் தம்பிரான்களில் ஒருவராக வீற்றிருந் தருளி குருவாணைப்படி புள்ளிருக்கு வேளூர்க் கோயிற் கட்டளை விசாரணையாக இருந்து வந்தார்.

இக் குருமகாசந்நிதானம் அருளிச்செய்த ஞான சாத்திரப் பனுவல் 'சித்தாந்த நிச்சயம்'‡ என்பதாகும்.

இவ்வாருக. மெய்யறிவுச்சுடராய் அருட்சேங்கோல் நடாத்திய குருமூர்த்திகள் சிவஞான தேசிகரேன்பார்க் குத் தமது திருவடி சூட்டி ஞானபீடத்தையும் சோக்கநாத பூசையையும் கோடுத்தருளி முத்திப் பேற்றை அடைந்தார்கள்.

---

* "கானமருங் கிள்ளையோடு குயில்சேம் போத்துக்
காட்டரவம் பூனையெலி கதியிற் சேர
ஞானவருட் பார்வைபுரி நாதா போதா
நாடறியேற்குன தருளை நயப்ப தேந்நாள்
வானமருங் கடம்பவனச் சவுந்த ரேசன்
மலரடியை யலரடியால் வணங்க வேண்ணித்
தானமரும் பூசைபுரி திருநாவுக் கரச
சம்பந்த ஞானகுரு தருமை வாழ்வே"

‡இந்நூல் அச்சிடப்பேற்றுள்ளது.

10. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

அருளாட்சி பெற்ற ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் இவ்வுலகில் நிகழ்த்திய வியத்தகு செயல்கள்தாம் எத்துணை! வழங்கிய ஞானோபதேசங்களால் மெய்யறிவுபெற்ற மக்களின் தொகைதாம் எத்துணை !

ஒருநாளிரவு தண்ணிலவு சொரியும் வேளையில் சித்தர் ஒருவர் விண்ணக வெளியிலே ஊர்ந்து செல்பவர் இம்மடாலயத்தின் மேலே செல்லுங்கால் அவர் செலவு தடைப்பட்டது. ஒரு நெறியுமறியாது திகைத்துப் பின்னர், இங்கு யாதானும் ஒரு சிறப்பு இருக்கவேண்டுமென்று கீழ்நோக்கினர். அப்போது நிலாமுற்றத்தில் ஒருவரின் நிழல் விழுவதையறிந்த குருமூர்த்திகள் நிழலை நோக்கி விரலால் சுட்டி வாவென்றழைத்தார்கள். நிழலைத்தரும் பொருளான சித்தரும் ஏதோ மந்திரத்தாற் கட்டுண்ட மாநாகம்போலத் தன்னிலையற்றுக் குருமூர்த்திகள் திருமுன்* வந்தனர். பரவசமாகி, சித்துக்களும் ஒரு செருக்குத் தருவதென்பதையுணர்ந்தனர். "ஆசிரியப்பெரும! சிவஞானப் பேறளித்துத் திருவடிக்கன்பனுக்குக" என்று மனங்குழைந்து, திருவடிகளில் வீழ்ந்துவேண்டினர். குருமூர்த்திகளும் கருணை கூர்ந்து பக்கலில் அழைத்து, திருவருணோக்கம் செய்து, தீக்கையும் புரிந்து, தம் அடியார் குழாத்துள் ஒருவராக இருக்கவும், சிவஞானச்செல்வம் நாடோறும் பெருக்கவும் திருவருள் பாலித்தார்கள். அவர் இங்ஙனம்

*மடாலயத்தில் சித்தர் வந்திறங்கிய இடம் இன்னும் சித்தர் கூட்டு என வழங்கப்படுகிறது.

வதியுநாளில், காயகற்பங்களையுண்டு பழகிய அவருக்கு மடாலயத்திலுள்ள அறுசுவையுண்டியால் உடல்நிலை வேறுபட்டது. அஃதுணர்ந்த ஞானதேசிகர் அடியார் குறிப்பறிந்து திருநீறு அளித்தனர். சித்தர் அதனைப் போற்றியணியவே உடலும் நலம்பெற்றது. உடல் பெற்ற பயன் குருபணிவிடை செய்தலே என்பதைக் குறிக்கொண்டு இடையறாது இயற்றிவந்து சின்னாட்களில் சிவத்துடன் கலந்தார்.

சேதிமாநகரத்து வேளாளர் ஒருவர், மாமியார் மருமகள் இருவரோடும் குருதரிசனத்திற்குத் தருமை போந்தனர். குருமகாசந்நிதானத்தை இறைஞ்சி மருமகளைச் சுட்டிக்காட்டி "இந் நங்கைக்குச் சிவ தீக்கை செய்தருள்க" என்று வேண்டிக்கொண்டனர். குருமூர்த்திகளும் 'மறுநாள் சொக்கநாத பூசை வேளையில் வருக' என அருளாணை தந்தனர். அவ் வண்ணமே அவர்கள் தூய்மையோடு வர, பூசை மடத்துக்குள் அழைத்துச்சென்று முறைப்படி சிவ தீக்கை செய்வித்தார்கள். குருதீக்கையால் ஞான வளர்ச்சியடைந்த அந் நங்கை, ஆண்டிலும் முதிரப் பெற்று செந்தமிழ்ச் சொக்கரை யாண்டும் இடையறாது தூமலர் தூவித் தொழுதுவர வேண்டும் என்னும் உள்ளக்காதல் உந்தவே பெருமானை நோக்கி,

"மதுரா புரிச்சொக்க ஞானப்பிர காசன் மடாலயத்தில்
சதுரான காரியஞ் செய்ததேன் னேயிந்தத் தாரணியில்
முதிரா விளம்பிஞ்சை நற்கனி யாக்கு முறைமையென்ன
எதிரா மலமறுத் தென்னையு மாட்கொண் டிருந்தனனே"

என்றஅருமைப் பாடலால் வணங்கிப் பரவினர். பின்னர், தம்மூருக்குச் செல்லும் மனமில்லாது, சொக்கேசன்

திருவருள் ஈர்க்கவே, அதிலே தளைப்பட்டு குரு ஞானசம்பந்தரது திருமுன்னிலையிலேயே நெடுந்தவம் இயற்றி முத்தி பெற்றனர்.

மகன் தந்தைக்காற்றும் கடனையுணர்ந்த ஒருவன் தந்தையிறக்கவே அவரை வீட்டுலகம் நண்ணு விக்க வேண்டுமே என்ற ஆசைமிக்கு, அதற்கு வழி யாது என உசாவியுணர்ந்து இறுதியில்' சிவஞான தேசிகர் திருவடி அடைதலே நன்று எனத் தெளிந் தனன். விரைந்து, தன் காதற்கிழத்தியையும் உடன் அழைத்துக்கொண்டு குருதரிசனவேட்கையில் தருமைப் பதியை அடைந்தான். அதனை ஞானக்கண்ணுல் நோக்கிய குருமூர்த்திகள், ''நீயிர் ஞானபுரீசுவரரை வழி பட்டு வருவீராக'' எனக் கட்டளையிட்டருளினர். அவர் களும் அவ்வண்ணமே சென்றிறைஞ்சி வந்தனர். குருமூர்த்திகள் அவர்களை நோக்கி, '' நும் விருப்பம் தந்தையை வீட்டுலகம் எய்துவிக்க வேண்டியதுதானே; அது குருவருளால் ஈடேறிற்று'' என்று அருளிச் செய் தார்கள். அருள்வேண்டி வந்தவர்கள் உவகை வெள்ளத்தில் திளைத்துத் திருவடிகளில் பன்முறை இறைஞ்சித் திருவருட் பிரசாதம் பெற்றுச்சென்றனர்.

ஒரு நற்போதில் ஞானதேசிகர் திருத்தல யாத்திரை செய்யத் திருவுளங்கொண்டு, சொக்கநாதப்பெருமான் எழுந்தருளிய பூசைப் பேட்டகத்தை அடியார்கள் திரு முடியிலே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு புள்ளிருக்கு வேளூரை யடைந்தார்கள். திருக்கோயில் வழிபாட்டிற்கு

சென்று செல்வமுத்துக்குமாரப் பெருமானை தொழுது தமிழ்க்குழகனின் தண்ணருட் பெருக்கால் பாமலர் புனைந்து சாத்தி ஏத்திப்பரவினர். சின்னாட் கழிந்த பின்றை, தில்லைச்சிற்றம்பலம் போந்து நட்டம் பயின்றாடும் நாதனைக் கையாற்றொழுது கழற்சேவடிகள் பரவிப் பண்ணார்ந்த பாடல்பல பாடியருளினார்கள். அதன்பின் ஆரூர்க்கு எழுந்தருளிப்போந்து புற்றிடங் கொண்ட பூங்கோயில் அம்மானை வழிபட்டுக்கொண்டு, சுற்றியுள்ள பஞ்சபூத தலங்களையும் பிற சிவத்தலங் களையும் குவித்தகை விரித்தறியா உளத்தராய் வணங் கிச் சித்தீச்சரம் அடைந்தார்கள். கமலை ஞானப் பிரகாசருடைய உபாசனு மூர்த்தியாகிய சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தியின் திருவருணோக்கத்திலே ஈடுபட்டுத் திருவருட்பாக்கள் பாடிப்பரவி சின்னாட்கள் ஆரூரிலே இருந்து, பின்னர் தென்னக யாத்திரை செய்ய விழைந்து மதுரைப் பெருநகரை அடைந்தார்கள். வெள்ளியம் பலத்துத் துள்ளிய பெருமானாகிய அண்ணல் ஆலவா யரையும் அங்கயற் கண்ணம்மையையும் வழிபட்டுத் திருமடத்தில் எழுந்தருளியிருக்குங்கால் ஒருநாள் பெரும்பிணிகொண்ட ஒருவன் வருதலைக்கண்டு அவன் மாட்டு அருள்கூர்ந்து பக்கலில் அழைத்து "நீ காளை யார் தீர்த்தத்தில் மூழ்கிவா" என்று ஆணையிட்டனர். அவனும் அவ்வாறே நிறைமொழி மாந்தராம் குருவரு ளாணையில் பற்றுடையவனாய்ச் சென்று அந்நீருண் மூழ்கினான். எழுந்து, தன்உடலம் மாசற்று ஒளிறுதலைக் கண்டு வியப்புற்றுக் குருவின் திருமுன் சென்று வீழ்ந்து வணங்கிச் சென்றான்.

சின்னுள் குருமூர்த்திகள் சேந்தமிழ்ச் சோக்கநாதப் பேருமான் திருவருட்கடலிலே ஆடித்திளைத்த பின்னர், திருச்சேந்தூருக்கு எழுந்தருளினுர்கள். வழியிற் பல தளிகளையும் தோழுது வணங்கித் திருச்சீரலைவாய் அணுகினுர்கள். அடியார் திருக்கூட்டம், காதலாகிக் கசிந்து அரகரவேன நாதன்நாமம் நவிலாநிற்பவும் அன்பர்கள் கோடியும் குடையும் ஓர்பாலும் ஆல வட்டமும் கை விளக்கும் தீவர்த்தியும் ஓர்பாலுமாக விருதுகள் பலவேந்திவந்தனர். குருமூர்த்திகள் எழுந் தருளுதலைக்கண்ட பேருமக்களேல்லாம் குருதரிசனப் புண்ணியத்தால் கண்பேற்ற பயன்கருதி மட்டிலா மகிழ்வேய்தினர். போற்றிமார்களேன்பார், சிவிகையி லூர்ந்து சேன்ற ஞானதேசிகரையும், பரிவாரங்களையும் கண்டு "பகலில் தீவர்த்தியுடன் சிவிகையிலே சேல்லு தல் கூடா"தேனத்தடுத்தார்கள். அதுகாலை, சேந்தில் வேலன் அருச்சகர் வடிவுகோண்டுவந்து போற்றிமார் களை நோக்கி, "சிவிகையினைத் தடுத்தது ஏன்? காரணத்தை விரித்துக்கூறுக"என்றருளினன். காரணம் அறியாப் போற்றிகள் "இவ்வாறு இங்குவரும் வழக்க மில்லை" என்று இதனையே காரணமாகக் கூறினர். பின்னர், சேவ்வேளாகிய அருச்சகர், ஞானுசாரியர் களுடைய பேருமையையும், அவர்கள் யாண்டும் விருதுகளோடு வரலாமேன்பதற்கேற்ற சாத்திரச் சான்று களையும் விதந்து கூறினர் போற்றிகளோ அதற்குத் தக்க மாற்றங்கோடுக்கமாட்டாராய்த் திகைத்து வீண் வம்பிழைத்தனர். இவர்களின் பயனில் வாதத்தைக் கண்டு சினந்த அருச்சகராம் பேருமான் சிறிது

சிற்றங்கோள்ளவே, அதனுல் போற்றிகள் வாய்பேசா மூங்கையராயினர். மாற்றுருக்கோண்டுவந்த மறையவரும் கரந்தருளினர். இஃதுணர்ந்த போற்றிகளும், ஞானதேசிகருடைய அருள் வலிமையினை எண்ணி வியந்து, தாங்களிழைத்த பெருந்தவற்றிற்கு நாணிக் கழுவாய் வேண்டித் தாங்களே தீவர்த்தி யேடுத்துச் சேன்றுர்கள். ஞானமூர்த்திகள் குறிஞ்சிக் கிழவனை - சேத்தில்நாதனை வழிபட்டு மீளுங்கால், போற்றிமார்கள் வந்து திருவடிகளில் பரவிப்பணிந்து 'சுவாமி! பிழைத்தவை போறுக்கையேல்லாம் பேரியவர் கடமையன்றே; எங்களை ஊமை நீக்கி அருள்பாலிக்க வேண்டும்' எனக் குழைந்து வேண்டினர். ஞானதேசிகரும், அருள்வண்ணத் திருநீற்றை அள்ளி அளித்தனர். அவர்கள் பணிந்து வாங்கி மேனியேலாம் பூசவே ஊமை நீங்கிப் பேரின்பமுற்றனர். குருமூர்த்திகளும் பல தலங்களையும் வழிபட்டுத் தல்யாத்திரை சேய்து கோண்டிருந்தார்கள்.

அஞ்ஞான்று, மலைநாட்டிலே துங்கன் என்னும் அரசன் ஆட்சிபுரிந்து வந்தான். அவனுக்கு ஒரேவோரு அருமைமகள் இருந்தாள். அவளைப் பிரமராக்கதம் தீண்டியிருந்தது. அவனும் எத்துணையோ மணிமந்திர மருந்துகள் கோடுத்து நீக்க முயற்சி சேய்தும் முயற்சி கைகூடிற்றிலது. தக்கண யாத்திரை சேய்யும் குருமூர்த்திகள் திருவருட்பேறு பேற்றவர்கள் என்பதைப் பலர்வாயிலாக அறிந்தான் அரசன். பேருமகிழ்வுகோண்டு தன்மகளையும் உடன் அழைத்துக்

கொண்டுவந்து ஞானதேசிகரது திருவடித்தாமரை களிலே வீழ்ந்து பணியச்செய்து குறையிரந்தான். ஞானக்குருமூர்த்திகளும் கருணைகூர்ந்து மந்திரமாவதும் மருந்துமாவதுமாகிய திருநீற்றை யளித்தருளினுர்கள். அதனை அரசன் தன் மகளுக்குப் பூசவே பிரமராக்கதம் நீங்கியது. அரசனது மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. இன்பக் கூத்தாடினன். செந்தமிழ்ச் சோக்கலிங்கப்பெரு மானுக்கு அபிடேக ஆராதனை செய்வித்தான். மகேசு வர பூசையும் நடத்துவித்தான். ஞான தேசிகருக்குப் பட்டணப்பிரவேசம் முதலியன செய்வித்தான். ஆண்டு தோறும் இவ்விழா செய்யவேண்டி, தனித்தனியாக* நிலங்களை இறையிலிசெய்து உரிமையாகக்கோடுத்தான். இறுதியாகப் பணிந்திறைஞ்சி விடைபெற்றுத் தன் நாட்டிற்குச் சென்ருன்.

இவ்வாறு வியத்தகு செயல்புரிந்தருளித் தேக்கண யாத்திரை முடித்துத் தருமை வந்து மடாலயத்தில் எழுந்தருளியிருந்தபோது ஒருநாள் திருவுலாப் போந் தார்கள். அதுகாலை, பிரமராக்கதமோன்று குருநாதர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நின்றது. குருநாதர், ‘துங்கன் மகளைப் பற்றியிருந்த பிரமராக்கத’ மேண வறிந்து, என்னசெய்ய வேண்டுமேன்று வினவினுர்கள். பிரமராக்கதம் ‘நல்லோரை நலியும் இவ்வுரு நீங்கி நற்கதியடையத் தேவரீர் திருவுளம் பற்றவேண்டும்’ என்று வேண்டிக்கோண்டது. அதற்கிரங்கிய குரு நாதர் தாஞ்செய்துவரும் அனுட்டானங்களில் ஒருகால

*இச்சிற்றூர் சிவஞானபுரம் என வழங்கப்படுகிறது.

அனுட்டானத்தை அதற்கு அளித்தருளினார்கள். உடனே அது தன்னுருநீங்கித் தேவவுருபெற்றுவிண்ணுலகடைந்தது. அதுமுதல் இன்றளவும் இக்குருமூர்த்திகளுக்குப்பின் வழிவழியாக வரும் குருமூர்த்திகள் யாவரும் ஒருகால சந்தியாவந்தனத்தை அதிகமாகச் செய்துவரும் வழக்கம் நடைபெறுவதறிந்து இன்புறக் கூடிய சான்றாகும்,

இவ்வண்ணம் சின்னாட்கள் செல்லாநின்றன. (கி. பி. 1740 ஆம் ஆண்டு) சிவஞான தேசிகர் திருவுள்ளம் காசி யாத்திரையின்பாற் சென்றது. சிவனடியே சிந்திக்கும் சிவஞான அடியார்கள் மருங்கு சூழக் காசிப் பெருநகர்க்கு எழுந்தருளினார்கள். அங்குக் கோயில்கொண்டருளும் துண்டிராசகணபதி, விசுவநாதர், அன்னபூரணி, கேதாரநாதர், காலவைரவர் முதலிய கடவுளர்களை வழிபட்டார்கள். அஞ்ஞான்றெழுந்த இடையறாப் பேரன்பு அருளாகத் தழைக்கவே, தற்போதுள்ள ஆன்மாக்களையும் நன்னெறிப்படுத்த எண்ணியது அவர்கள் திருவுள்ளம். அதனால், பலதுறைப்பட்ட திருவருட்பாக்களை இயற்றியது. குருமூர்த்திகள் சின்னாள் காசிப்பதியிற்றங்கி தருமபுரத்திற்கெழுந்தருளி அருட் செங்கோல் புரிந்து வந்தார்கள். இறுதியாக, சச்சிதானந்த தேசிகருக்கு ஞானபிடேகஞ் செய்து ஐப்பசித்திங்கள் கிருட்டின பக்கத்துப் பத்தாம்நாள் முத்திப்பேற்றையெய்தினார்கள்.

இக் குருமூர்த்திகளிடம் அருள் உபதேசம் பெற்ற அடியார்கள் சச்சிதானந்த தேசிகர், தமிழாகர முனிவர்,

சிதம்பரநாத முனிவர், திருக்கடவூர் பஞ்சாக்கர முனிவர், புன்கூர் சிவப்பிரகாச முனிவர், சங்கரகுமார முனிவர், சிவானந்த முனிவர், முத்துக்குமாரத் தம்பிரான், அக்ஷயலிங்கத் தம்பிரான், தில்லைநாயகத் தம்பிரான், காவை அம்பலவாண முனிவர், சைவ எல்லப்ப நாவலர் முதலியோராவார்கள்.

இவ்வடியார்களுள் தில்லைநாயகத் தம்பிரான் சுவாமிகள், குருமூர்த்திகள் பணித்தவண்ணமே திருப்பனந்தாளில் ஞானச்சுடர் விளக்காகக் காசிமடத்தைத் தோற்றுவித்தார்கள். தோற்றுவித்த காலம் கி. பி. 1720 எனத் தெரிகின்றது.

இவ் ஞான தேசிகர் காலத்தில் ஆற்றிய திருப்பணிகள் அளப்பரியன மடம், ஆலயம், தீர்த்தம் முதலியன பழுது பார்க்கப்பட்டன. அவற்றுள், மடாலயத்தில் சோக்கநாதப் பேருமான் பூசை மடமும், சித்தர்கட்டும்; புள்ளிருக்கு வேளூரில் அம்மையார் சந்நிதி, தட்டம் சுற்றி மண்டபமும், தீர்த்தக்கரையின் நாற்புறங்களும் கருங்கற்பணி செய்விக்கப்பேற்றன. அவற்றைத் தெறிவிக்கும் கல்வேட்டுகளும் பல உள்ளன.

11. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள்

ஞானச்சேங்கோல் சேலுத்திச் சேன்ற சிவஞான தேசிகருக்குபின் அருளாட்சிக்கு வந்தவர்கள் திருப்பேருந்திரு சச்சிதானந்த தேசிகராவார்கள். இவர்கள்,

சிவ அன்பில் முருகிய பேரடியார்கட்கு ஞானோபதேசம் செய்தருளுங் காலத்தில் ஒருநாளிரவு நள்ளிருட் போதில், ஒருமகன் குழிந்தகண்ணும் கிழிந்த ஆடையு முடையனுய் இரங்கத்தக்காணுக மடாலயத்தின் முன் வாயிலில் வந்துநின்று வயிற்றுப் பசியால் நலிந்த வன்போல "அந்தோ! பசி! பசி! சோறு வேண்டும், சோறு வேண்டும்" என ஒல மிட்டான். அவ்வோலம் அறிதுயிலில் அமர்ந்திருந்த குருமூர்த்திகள் திருச் சேவியிற்படவே அக்கருணைக்கடல் அருளலையாகப் போங்கியது. உடனே விரைந்தெழுந்து திருவருட்டுணை யால் வந்தவன் அரசனே யென்றும், மாறுவேடம் பூண்டு வந்துள்ளானென்றும் மெய்யுணர்ந்து, தாமே மடைப்பள்ளியினுட்புக்கு ஒரு வேண்கலப் பாத்திரத் தில் சோற்றை யெடுத்துவைத்துக் குழம்பு முதலிய வற்றையும் அதனுட்பெய்து வேளியிற்கோடுபோந்து 'இதனை எடுத்து உண்பாயாக' என்று அருளிச் சேய் தனர். வந்த பசியாளன் பாத்திரத்தை யாரிடம் ஒப்பு விப்பது என்று வினவினன். குருமூர்த்திகளும் புன்னகைபூத்து, "ஏன், அரண்மனையிற் சேர்க்கலாமே" என்றார்கள். அரசன் அவ்வுரையை உணர்ந்து வைத்தும் தன்னைக்காட்டிக் கோள்ளாது விரைந்து அரண்மனைக்குச் சேன்று துயிலமர்ந்தான். மறுநாட் காலையில், தன் நாளோலகத்தில் அவையோரைக் கூட்டுவித்து அமைச்சர்கள்பால் இரவு நிகழ்ந்த சேய்திகளையெல்லாங் கூறினன். மேலும் குருமூர்த்தி களுடைய உயிரோம்பும் திறத்தையும், எளிவந்து எப் போழுதும் அளிசேயும் வண்மையையும், எப்போருளும்

அறிந்துகோள்ளும் அருள் வலிமையையும், வியந்து பாராட்டினன்.

பின்னர் ஒருநாள், அருளுடை அண்ணல் குழகர் கோடியில் நீராடத் திருவுளம் கோண்டார்கள். சிந்தை மிகு அடியார்கள் புடைசூழத் திருமறைக்காடு சேன்ருர்கள். அண்ணலார் வருகையறிந்த யாழ்ப்பாணம் கந்தப்பச் சேட்டியார் என்பவர் போற்றி யேதிர்கோண்டு தோண்டுபல சேய்தனர். குரு மூர்த்திகள் மறைக் காட்டு இறைவனை வழிபட்டு அங்கு எழுந்தருளி யிருக்குங்காலத்தில், காட்சியளவை யோன்றையே மேய்யேன நம்பியிருக்கும் நாத்திகவாதிகள் சிலர் மடமைச் சேருக்கால் ' கடவுளில்லை ' என்று அவரிடம் வாதம் சேய்தனர். குருமூர்த்திகளும் அவர்கள் நிலைக்கு எளிவந்திரங்கி அவர்கள் கோண்ட அளவை யாலேயே கடவுள் ஒருவருண்டு என நிறுவிக்காட்டி ஞர்கள். அதனுல், அந்நாத்திகர்கள் அழுக்காறுற்றுக் கரந்த நேஞ்சினராய் அண்ணலார் திருவடிகளில் வீழ்ந்து திருந்திய அன்பர்கள்போல இறைஞ்சி, 'யாங்கள் நடத்தும் மாகேசுவரபூசையை ஏற்றுக் கோள்ளத் திருவுளம் பாலிக்கவேண்டும்' எனப்பணிந்து வேண்டினர். விருப்பு வேறுப்பற்றக் குணமேன்னுங் குன்றேறி நின்றவர்களன்றே மூர்த்திகள். எனவே அதனை ஏற்றருளினுர்கள். அன்றிரவு அவ்வஞ்சகர்கள் நஞ்சங்கலந்த பாலைக் கோடுக்கவும் குருமூர்த்திகள் வழக்கப்படித் திருநீற்றை அதிலிட்டுப் பாலைப் பருகி ஞர்கள். " நஞ்சு மமுதாமேங்கள் நாதனடியார்க்கு "

என்னும் மொழிக்கு இலக்கியமாக மறுநாள் விடியற் போதில் நலனே எழுந்தருளியிருந்தார்கள். வஞ்சக் கனவை நனவாக எண்ணி மகிழ்ந்திருந்த நாத்திகர்கள் விடியலில் வந்துகாண, அருள்கெழுமிய குருமூர்த்தி களும் கருணையொழுகு முகத்தோடு உளத்து உவகை மேலிட வேறுபாடின்றியிருத்தலை யறிந்து, தம் வஞ்சப் பிழைக்குத் தாமே நாணி வருந்தி வந்து சுவாமிகளை வணங்கி மன்னித்தருள வேண்டினர். சச்சிதானந்த தேசிகர் அறியாதார்போல "நீங்கள் என்ன பிழை செய்தீர்கள்" என்று புன்னகைபுரிந்துகொண்டே, "என்னைச் சிவமாக்க ஆலால சுந்தரர் சிவத்தின் ஆணை பெற்றுச் செய்த பிழையை என் கட்டளை பெறுமலே நீங்கள் செய்தீர்கள், என்ன தவறு?" என்று கூறி அவ்வஞ்சத்தை மனங்கொளாது இருந்து அவர் களைத் தூய்மை செய்யவேண்டிச் சிவதீக்கை செய்து சின்னாள் ஆங்கே தங்கியிருந்தனர். பின்னர், தருமைப் பதி வந்தடைந்து அருளாட்சி செலுத்தினார்கள். பன்னாட் கள் சென்றபின், தமது அருமையாம் நிலையில்நின்ற அடியார் கூட்டத்துள் ஒருவராகிய முத்துக்குமார சுவாமிகட்கு ஞானோபதேசஞ்செய்து ஞானபீடத்தை யருளிச் சிவயோக சமாதி கூடினார்கள்.

12. ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகள்

இவர்கள் அருளரசு ஓச்சி வருங்காலத்தில் திருநெல்வேலி மேடை தளவாய் முதலியாரவர்களும் சைவப் பேரன்பர் பலரும் வந்து, மகாசந்நிதானம் தேக்கண யாத்திரைக்கெழுந்தருள வேண்டுமென்றும்,

திருநெல்வேலி நகருக்கும் வருகைபுரிய வேண்டு மென்றும் பணிந்து வேண்டினர். அருட்பெரியாரும் அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கி அடியார் திருக் கூட்டம் மருங்குசூழச் செல்லாநின்றனர். வழியிடை யில் திருக்கானப்பேர் என்னும் தலத்தில் தங்கினார்கள். அதுகாலை, ஆங்குள்ள அருணகிரி முதலியார் என் பாரும், அவர் காதல் மனையாட்டி சிவகாமியம்மையாரும் நெடுங்காலமாக மகப்பேறின்றி வருத்தமுற்று, குரு மூர்த்திகளின் பூங்கமலப் பொன்னடிகளைத் தொழுது தம் எண்ணத்தை விண்ணப்பித்துப் பரிகலச்சேடம் அளித்தருள வேண்டினர். அவர்கள் வேண்டிய காலமோ மாலை யாதலால், ஞானவள்ளலார் மடைப்பள்ளியிற் சிதறிக்கிடந்த சோற்றைப் பொறுக்கி வரப் பணித்து அருள் சுரந்து அளித்தனர். முதலி யாரும் ஆசையாற்சூழ்ந்து ஏற்று அம்மையார் கையிற் கொடுக்க அவர் உண்டு தம் இல்லத்திற்கேகினர். ஞான குரவரின் பரிகலசேடம் உண்ட நற்பேற்றால் உரிய காலத்து ஓர் ஆண்மகவை ஈன்றனர். ஞானகுரவர் யாத்திரை முடித்துத் தருமைக்கெழுந்தருளி இருந்த போது, அவர் துணைவியரோடும் குழந்தையைக் கொண்டுவந்து திருமுன் கிடத்தி 'முத்துக்குமார பரிகலம்' எனத் திருப்பெயரிட்டனர். ஞானமூர்த்தி களிடத்து அருட்கட்டளை பெற்று மாகேசுவரபூசையும், செந்தமிழ்ச் சொக்கநாதருக்கு மகாபிடேகமும் செய் வித்துத் திருவருள்பெற்றுத் தம்மூருக்கு ஏகினர். இறுதி யாக இம் முத்துக்குமார தேசிகர் சிவநெறிச்செல்வரான ஞானசம்பந்த தேசிக மூர்த்திகளை, தமது பீடத்திலமர்த்தி முத்திநிலை யெய்தினார்கள்.

13. ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

இக் குருமூர்த்திகள் சிவஞான உபதேசம்பெற்று அருட்சேங்கோல் நடாத்தி வருங்காலத்து இங்குப் பல தமிழ்ப் பெரியார்கள் தோன்றினர். அவர்களுள் கல்வி நலங்கூர்ந்தவர்கள் சீகாழிப் புராணம், இராம நாடகம் முதலிய செந்தமிழ் நூல்களை ஆக்கிய அருணசலக் கவிராயரும், சிதம்பரநாதத் தம்பிரான் முதலிய அடியார் களுமாவார்கள். இவர்கள் காலத்தில்தான் (கி. பி. 1812) கிழக்கிந்தியக் கம்பேனியார் தெய்வத் தமிழகத் தின் அறநிலையப் பாதுகாப்பைக் கண்காணிக்கத் தலைப் பட்டனர். இக்குருமூர்த்திகள் தமது அடியார் திருக் கூட்டத்துள் ஒருவரைத் தேரிந்தெடுத்து ஞானு பிஷேகஞ்செய்து கந்தப்ப தேசிகர் எனப் பேயர்சூட்டி சிவயோகசமாதி கூடினர்.

14. ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிக சுவாமிகள்

அருள்வழி வந்த கந்தப்ப தேசிகர் சேந்நேறிச் சேல்வம் தழையச் செய்து வருங்காலத்து ஒருபோது தேக்கண யாத்திரை செய்தவர்கள் திருநேல்வேலி நகரில் எழுந்தருளியிருந்தார்கள். அதுகாலை மழை பெய்யாது போய்க்கவே, குடிமக்கள் வறங்கூர்ந்து வாடி வருந்தினர். அரசியல் வரி அலுவலாளர்கள் வரி வேண்டிக் குடிமக்களை ஒறுத்து வருத்தினர்கள். குடிமக்கள் மாவட்டத் தண்டல் நாயகத்திடஞ் சென்று "மழையின்மையால் விளைவுப்பயனில்லை. அதனல் வாடி வருந்தும் நாங்கள் வரி சேலுத்துவது எவ்வாறு?

என முறையிட்டனர். அத்தண்டல் நாயகத் துரை அவர்கள் "என்னிடஞ் சோல்லிப் பயன் என்ன" உங்கள் பாதிரியாரிடத்திற் சேன்று கூறினுல் மழை பேய்யச் சேய்துவிடுவாரே" என்று ஏளனமாகக் கூறினுர். குடிமக்களை அக்கோடிய கூற்று மழையின்மையாற்பேறும் வருத்தத்தினும் மிக்கு வருத்தியது. ஆதலால், நிகழ்ந்தவற்றையெல்லாம் ஞானமூர்த்தியிடங் கூறிக் குறைவேண்டினர். காட்சிக்கு எளியராகிய அவர்கள் சேவிமடுத்ததும் புன்முறுவல் பூத்தனர். தமிழ்ச் சோக்கநாதரை வழிபட்டுத் தியான சமாதியில் எழுந்தருளியிருந்தபோது ஒரு திருப்பாடலைப் பாடினுர்கள்.

" சைவ சமயஞ் சமயமேனி லச்சமயத்
தேய்வம் பிறைசூடுந் தேய்வமேனி - லைவரைவேன்
ருனந்த வேள்ளத் தழுந்துவதே முத்தியேனில்
வானங்காள் பேய்க மழை ".

இப்பாடலால் 'தேய்வத்தமிழ்' என்பதை யுணர்ந்த மேகங்கள் ஒன்றுகூடிக் கருக்கோண்டு மழை போழியா நின்றன. ஏரி குளமேலாம் நீர் நிரம்பி வழிந்தது. ஆற்றிலோ வேள்ளம் கரைபுரண்டு ஓடியது. எவ்வுயிரும் இன்பத்தில் மூழ்கின. எள்ளி நகையாடிய துரை மகன் ஞானசாரியப்பேருமானது அருள் வலிமையை அறிந்து போற்றினுர். தான் ஏளனம் சேய்தமைக்கு வருந்திச் சோக்கநாதப் பேருமானுக்குச் சிறப்போடு அபிடேக ஆராதனைகள் நடத்தும்படி நூறு வராகன் போன்னைக் காணிக்கையாக வைத்து வணங்கினுர்.

பின்னர், ஒருநாள் ஞானவள்ளல் தாமே காசிப்பதி சேன்று கங்கையில் நீராடி வருவதற்கு இயலாதது பற்றி மனங்கவன்றார்கள். இதனையறிந்த திருக் கூட்டத்து அடியார்களுள் ஒருவராகிய விருத்தாசலத் தம்பிரான் என்பார் ஞான குருவின் விருப்பத்தை நிறை வேற்ற எண்ணினார்கள். உடனே தருமையினின்றும் புறப்பட்டுத் திருவனந்தை சேன்றார்கள். ஆலயத்தினுட் புக்கு இறைவன் சந்நிதானத்தில் வழிபட்டு நின்று சாரங்கி யென்னும் இசைக்கருவியினால் இறைபுகழ் பாடிப் பரவிக் கோண்டிருந்தார். பாடல்தோறும் அவ்வூர் அரசன் இறைவனுக்கு வழியடிமைபூண்ட பேருமை தோன்றியது. அதுகாலை அம்மையார் முனிவருக்குப் புலனாகாமல் அவர் தோளின்மீது நின்று பாடலுக் கேற்ப ஆடிக்கோண்டிருந்தார்.

வழிபட வந்த அரசன் ஆடல்புரியும் அம்மை யாரைக் கண்ணுற்று விரும்பி வியந்தான். அம்மையின் திருவடிகளைப் பற்ற மனங்கோண்டு ஓடி வந்தான். வந்தவன் பாடிய முனிவரின் கழுத்தைக் கட்டித் தழுவி னான். முனிவர் திடுக்கிட்டுத் திரும்பவே அரசனேன்று தேரியவந்தது. தேரிந்த முனிவர் " இங்ஙனம் தழுவக் காரணம் யா" தேனக் கேட்டு நிகழ்ச்சியை யறிந்தார். அம்மையார் திருவுருவத் தோற்றத்தைக் கண்டுகளிக்க வியலாமைக்கு வருந்தினார். அரசன் சுவாமிகளைப் பார்த்துத் " திருவருள் மிக்க அண்ணலே! அடியேனைப் பாராட்டிப்பாடுதற்குக் காரணம் யாது? என்பதை அருள வேண்டும்" என்று விண்ணப்பித்தான். சுவாமிகள்

" எங்கள் ஞான குரவர் கங்கையாட விரும்பினார்கள். அதனை நிறைவேற்ற உமது உதவியை விரும்பினேன்" என மாற்றம் பகர்ந்தார்கள். அரசனும் " அடியேனுக்கு இப்பேறு கிடைத்தவாறென்னே! சுவாமிகள் திருவுள்ளப் படியே நடப்பேன்" என்று கூறினன். சுவாமிகள் விரும்பியவாறு யானை, ஒட்டகம் முதலியவைகளையும் பிறவற்றையும் கொடுத்துதவினான். சுவாமிகளும் திருவனந்தபுரத்தினின்றுகாசிக்குச்சென்று கங்கையாடி, கங்கைநீரை முகந்து யானை முதலியவற்றிலேற்றிக் கொண்டு தருமபுரம் திரும்பினார்கள். திருமடத்தில் பெரிய தொட்டியொன்றமைத்துக் கங்கைத் தீர்த்தத்தை நிரப்பினார்கள். குருமூர்த்திகள் காசியில் கங்கைப் பெருவெள்ளத்தில் ஆடினாற்போலத் திருமஞ்சனஞ் செய்தார்கள்.

இப்பெற்றியில், அடியார்கள் குறிப்பறிந்து பணிவிடை செய்துவர அருளாட்சி நடத்தினார்கள்; நடையருப் பெருந்துறவும் ஞானமும் மிக்க மேற்கண்ட விருத்தாசலத் தம்பிரானுக்கு ஞானபிடேகம் செய்து மாசிலாமணி தேசிகர் எனத் தீட்சைத் திருநாமம் சூட்டிப் பீடத்தில் அமர்த்தி, சொக்கநாதப் பெருமான் பூசையையும் கொடுத்தருளிச் சிவசமாதி கூடினார்கள்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் பார்வையிலிருந்த தேவஸ்தானங்கள் இவர்கள் காலத்தில் (கி. பி. 1841) மீண்டன.

15. ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள்

இவர்கள் ஆட்சிக்காலத்தில் கோள்நிலை திரிந்து மழை பெய்யாது போய்த்தது. ஆறு குளங்களில் நீரின்றிப் பயிர்களும் உயிர்களும் வாடின. நந்த வனங்களிலுள்ள மரம்,செடி, கொடிகளெல்லாம்வாட்டமுற்றன. ஆலயங்களில் நடக்கும் நாட் பூசனையும் சிறப்பு விழாவும் முறையே நடைபெருதொழிந்தன.

"விசும்பிற் றுளிவீழி னல்லால் மற்றுங்கே
பசும்புற் றலைகாண் பரிது"

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"


என்பன பொய்யாமொழியன்றே! துன்புற்ற மக்கள் யாவரும் துயர் துடைக்க வேண்டி, குருமூர்த்திகள் திருமுன் விண்ணப்பித்தார்கள். குருமூர்த்திகளும் சொக்கநாதப் பெருமானுக்கு அபிடேக ஆராதனைகள் செய்து நெஞ்சம் நெக்குருகி வழிபட்டு, ஐயாறகலாத செம்பொற் சோதியைக் குறிக்கும் "புலனைந்தும் பொறிகலங்கி" என்னும் மேகராகக் குறிஞ்சிப் பண்ணுகிய திருநெறிய பாடலைச் சாரங்கி என்னும் இசைக்கருவியில் அமைத்துப் பாடினார்கள். இறைவன் அருள்சுரக்கவே வானமும் பெருமழை பொழிந்தது. வறிய நீர்நிலைகளெல்லாம் வழிந்தோடின. மன்பதையுலகம் மகிழ்ச்சியில் திளைத்தது.

இவ்வண்ணம் அரிய பல செயல்கள் புரிந்து கொண்டு பீடத்தில் இருக்குங்காலத்தில் தருமைக்கு அணித்தேயுள்ள மணக்குடி ஆலயத்தையும், தருமையி லுள்ள தருமபுரீசுவரர் ஆலயத்தையும் திருப்பணி செய் வித்து மகாகும்பாபிடேகமும் நடத்தியருளினார்கள். இறுதியாக, சச்சிதானந்த தேசிகருக்கு அபிடேகஞ் செய்து பீடத்தில் அமர்த்தி சிவசமாதி கூடினார்கள்.

16. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள்

இவர்கள் அருளாட்சியேற்று ஞான பாநுவாய் விளங்கியஞான்று சைவ சித்தாந்தச் செந்நெறியை உலகமெலாம் பரவச்செய்து, சித்தாந்தத்தேனைப் பருகி அகவிருள் போக்கி ஆன்மாக்கள் உய்யுமாறு அருளி னார்கள். அதுகாலை இவர்களிடம் அருளுபதேசம் கேட்டுத் தேளிந்த ஆறுமுகத் தம்பிரான் என்பவர்கள் வெள்ளப்பள்ளம் சாஸ்திரிகள் என்னும் ஸ்மார்த்தர் மாயூரம் துலாக் கட்டத்தில் பிரும்ம சூத்திரத்திற்கு விஷ்ணுபரமாக உரை வகுப்பதைக் கேள்வியுற்றார்கள். சாஸ்திரிகள்வினை பக்குவமாங்காலம்,தம்பிரான்உள்ளத் தினின்று ஊக்கியது. குருவருள் ஆணைபெற்றுச் சென்றார்கள். வாதுசெய்ய அழைத்தார்கள், சாஸ் திரியார், 'நடுவராக இருந்து வழக்குத்துணியும் ஒரு வரை வைத்துத் தோடங்குவோம்' என்றார். 'ஆயின் நீரே இருக்கத்தக்கார் ஒருவரை யியம்பும்' எனத் தம்பிரான் அருளினார்கள். சாஸ்திரிகள் நேடிது சிந்தித்து 'உங்கள் குருமகாசந்நிதானம் அநுபூதி மானாக இருப்பதால் அவர்களே இருக்கட்டும்' என்றார்.

சிவசைலத்தில் :



தருமையாதீனம் 16ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருமூர்த்தம்

தம்பிரான் சுவாமிகள் சாஸ்திரிகளையும் அழைத்துக் கொண்டு தருமைக்கு வந்தனர். குருமகாசந்நிதானத்தின் திருமுன் வாது தொடங்கினார்கள். பிரும்ம சூத்திரத்தின் பொருள் சிவபரத்துவங் கூறுவதே என்பதைப் பல பிரமாணங்காட்டி நிறுவினார்கள். சாஸ்திரிகள் சுவாமிகளை வணங்கத் தலைப்பட்டனர். சுவாமிகள் 'இங்கு எல்லா வணக்கமும் எங்கள் குருநாதனுக்கே' என்றார்கள். உடனே சாஸ்திரிகள் குருமூர்த்திகளை இறைஞ்சிப் 'பிழைபொறுத்தருள்க' என வேண்டினர். ஞானகுரவர் சாஸ்திரிகளின் பக்குவத்தை யறிந்து தீட்சை முதலியன செய்து சைவப் பேரன்பராக்கிச் சைவ சந்நியாசமும் அளித்தார்கள். சாஸ்திரிகள் குருகாணிக்கையாக 'வேள்ளப்பள்ளம்' என்னும் சிற்றூரை ஏற்பித்தார்கள். பின்னர், அவர்தம் மனைவியாரும் வந்து தீட்சைபெற்றுத் துறவுநிலை மேற்கொண்டு சின்னாளிருந்து இருவரும் சிவனடி நீழல் சேர்ந்தனர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இவர்களைக் காண ஒருமுறை வந்தார்கள். குருமூர்த்திகள் பிள்ளையவர்களுடைய கவித்திறத்தில் கருணை நிறைந்து அடிக்கடி வந்து போகவேண்டும் என்று அருட்கட்டளை தந்தார்கள். அவ்வண்ணமே அடுத்தமுறை வரும்போது ஞானகுரவரின் அருட்குணங்களிலும் ஆட்சிச் சிறப்பிலும் அகங்குழைந்த பிள்ளையவர்கள் 'சச்சிதானந்த தேசிகர் மாலை' என்ற பிரபந்தத்தைப் பாடிவந்து பல கொடைச் சிறப்புக்களும் பெற்றுச்சென்றார்கள்.

இவ்வருள் குருமூர்த்திகள் ஆதீன மடத்தில் பல விடங்களில் கருங்கல் திருப்பணியாகச் செய்தார்கள். ஆதீனஆலயங்களைச் செம்மையுறக் காத்து வந்தார்கள்.

இவ்வாறு அருட்கலைச் செல்வராக இருந்தருளுங் காலத்து, திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌன மடம் விசாரணையிலிருந்த வைத்தியலிங்கத் தம்பிரான் அவர்களின் நடத்தை மௌனமடம் ஆட்சி ஆதீனப் பொறுப்பிலிருந்து விலகக்கூடியதாக இருந்தபடியால் வழக்காடி மீட்கப்பட்டது.

இக்குருமூர்த்திகள் அருணந்தித்தம்பிரான் என்னும் அடியவர்க்கு இளவரசுப்பட்டங்கட்டித் தேக்கணம் அனுப்பிஇருந்தார்கள். அவர்கள் விரிந்த எண்ண முடையவர்கள். நிலபுலங்கள் நிறைய வாங்கிச் சேர்க்க வேண்டும் என்ற பெருவிருப்புடையவர்கள். ஆதலால், மடாலயத்தின் பொருள் நிலைக்கு மிக்கும் நிலங்களை விலைபேசி வாங்கத் தலைப்பட்டனர். இதுபோன்ற பல நிகழ்ச்சிகளில் குருவாணையையும் மேற்கொள்ளாதிருந் தார்கள். இந்நிலை கேட்டறிந்த குருமகாசந்நிதானம் அவர்களே தேக்கண யாத்திரைக்குச் சென்றபோது அங்கிருந்த இளவரசுப்பட்டத்து சுவாமிகளது நடை முறைகளை நேரிற்காண நேர்ந்தது. அதனால் அவர்களை விலக்கி 7-11-1873ல் மாணிக்கவாசக தேசிகருக்கு இளவரசுப் பட்டங்கட்டி வைத்தார்கள். பின்னர் இவர்கள் 30—11—1873ல் சிவசமாதி கூடினார்கள்.

17. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள்

இக்குருமூர்த்திகள் அருளாட்சி நடாத்துங்கால் தலயாத்திரை செய்யத் திருவுளங்கொண்டு தருமையம் பதியை நீங்கித் திருமுதுகுன்றம், திருச்சிராப்பள்ளி முதலிய தலங்களை வழிபட்டு வந்தார்கள்.

இவர்கள் காலத்து, சிவசமாதிகூடிய சச்சிதானந்த தேசிகரால் விலக்கப்பெற்ற அருணந்தி சுவாமிகள் தம்மை விலக்க யாருக்கும் உரிமையில்லை யென்றும், சச்சிதானந்த தேசிகருக்குப்பின் தமக்கே பட்டம் உரியது என்றும் 1875ல் வழக்குத் தொடுத்தனர். அருணந்தி சுவாமிகள் வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் தோற்றுப்போயிற்று. இங்கிலாந்து அரசர் சபைக்கு வழக்குத்தொடர எண்ணியிருக்கும் சமயம் பட்டத்திலிருக்கும் மாணிக்கவாசக தேசிக சுவாமி களைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அருணந்தி சுவாமிகளும் பதவியிலிருந்தவர்களாயிற்றே என்பதை யும், அவர்கட்கு மேற்குறித்த வழக்கால் பெருங் கடன் ஏற்பட்டிருப்பதையும் திருவுளத்தடைத்து பிரேஞ்சு இலக்காவிலுள்ள சேத்தூர்கிராம நிர்வாகத்தை அவர்களிடம் கொடுத்து அங்கேயே இருக்கச்செய்து அருள்பாலித்தார்கள்.

இவர்கள் காலத்தில் திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவராக இருந்த இராமலிங்கத் தம்பிரான் அவர்கள்

1880ம் ஆண்டு இத்தருமையாதீனப் பரம்பரையில் வராத ஒருவரைக் குருவாணையின்றி அம்மடத்துக்குத் தலைவராக்கிப் பரிபூரணம் எய்தினர். குரு சிஷ்ய உரிமையை நிலைபெறுவிக்க வேண்டுமென்ற எண்ணம் உதிக்க 1881ம் ஆண்டில் வழக்கு தொடுக்கப் பெற்றது. 1878 இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவராக நியமனம் பெறுபவர்கள் 'தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியார்களில் ஒருவராக இருக்கவேண்டும்' என்று முடிவு செய்யப்பெற்றது. இப்படிப் பெரிய வழக்கு களாக இரண்டு மூன்று ஏற்பட்டதால் மடத்தின் பொரு ளாதார நிலை பாதிக்கப்பெற்றிருந்தது. அதனால் கடனும் மிகுதியாயிற்று.

இக்குருமூர்த்திகள் திருக்கடவூர் ஆலயத்தைத் திருப்பணி செய்வித்தார்கள். மகா கும்பாபிடேமும் சிறப்புற நடத்தினார்கள். மடாலயத்தில் பல சீர்திருத் தங்கள் செய்தார்கள். புள்ளிருக்கு வேளூர் வைத்திய நாதப் பெருமான் தேவாலயத் திருப்பணி தொடங்கப் பெற்றது.

இவ்வாறு மடாலயத்திலும், சிவாலயங்களிலும் திருப்பணி செய்வித்துக்கொண்டிருந்த குருமூர்த்திகள் தமது அருளாட்சிக்குட்பட்ட திருபுவனம் தேவஸ் தானத்திற்கு எழுந்தருளியிருக்குங் காலத்துச் சிவஞான தேசிகருக்கு அருளரசு கொடுத்தருளிச் சிவசமாதி கூடினார்கள்.



தருமையாதீனம் 19-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

18. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

இக்குருமூர்த்திகளது அருளாட்சிக் காலத்து திருநின்றியூர் ஸ்ரீ இலக்குமிபுரீசுவரசுவாமி ஆலயமும், சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி ஆலயமும் திருப்பணி செய்விக்கப்பெற்றன. மகாகும்பாபிடேகங்களும் நடத்துவிக்கப்பெற்றன.

இவர்கள் 22—4—1900 இல் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு இளவரசுப்பட்டம் கட்டினார்கள். 'எல்லா நிர்வாகப் பொறுப்பையும் பெற்று நடத்துக' என்று ஒரு உயிலும் எழுதி வைத்தார்கள். சிறிது காலத்துக்குப்பின் மனவேற்றுமை ஏற்பட்டது. அதனால் இவ்விருவரிடையும் விவகாரங்களும் உண்டாயின. பின்னர், மகாசந்நிதானமவர்கள் காசியாத்திரையாகப் புறப்பட்டார்கள். யாத்திரை முடித்துக் கொண்டு 30—3—1906 இல் திருப்பனந்தாளில் வந்து எழுந்தருளியிருந்தார்கள். 1906 இல் மீண்டும் தமக்கு நிர்வாகப் பொறுப்பை விட்டுவிட வேண்டுமென்று கும்பகோணம் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்தார்கள். வழக்கு நடைமுறையிலிருக்கும்போதே 1-12-1906லே திருப்பனந்தாளில் பரபூரணமானார்கள்.

19. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள்

சிவஞான தேசிகரால் ஞானபிடேகம் செய்விக்கப்பெற்ற இக்குருமூர்த்திகள் இளவரசுப் பட்டத்திலிருந்து

நிர்வாகத்தை நடத்திவந்தார்கள். மனவேற்றுமை யுடன் திருப்பனந்தாளில் எழுந்தருளியிருந்த சிவஞான தேசிகரால் பரிபூரண காலத்து உயிலேழுதி வைக்கப் பேற்றதாகத் திருநாவுக்கரசுத் தம்பிரான் என்பவர் தாமே பட்டத்திற்குரியவரேன்று 1907 ல் கும்ப கோணத்தில் திருவம்பல தேசிகர் என்ற பேயரால் வழக்குத் தோடுத்தார். 1910 ல் அந்த வழக்குத் தள்ளுபடியாகி இக்குருமூர்த்திகளுக்கே வேற்றியாக முடிந்தது. அதன்மேல் சேன்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் கோடுக்கப்பேற்றது.

புள்ளிருக்குவேளூர், திருவாரூர் இராஜாங்கக் கட்டளை, மலைக்கோட்டை மௌனமடம் கட்டளை இவை கட்டு ஸ்கீம் வழக்குகள் ஏற்பட்டன.

இவர்கள் காலத்தில் கடன் தோல்லைகள் மிகுதி. பல கடன்கள் கட்டுப்படுத்தத் தக்கதில்லை யேன்று கட்சியாடி வேன்றார்கள். இவர்கள் 1914 ல் சிவஞான தேசிகருக்கு ஆட்சிப் போறுப்பையளித்து, சோக்க நாதப்பேருமான் பூசையையும் கோடுத்தருளி முத்திநிலை யேய்தினார்கள்.

20. ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

இவர்கள் ஆட்சிக் காலத்தில், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி ஆலயத் திருப்பணி தோடங்க தேவகோட்டை நகரத்தார் திருவாளர். உ. இராம. மே. சுப. சேவு. சேவுகஞ்சேட்டியார் குருமூர்த்திகளிடம்

ஒரு ஒப்பந்த விண்ணப்பமளித்துத் திருப்பணி நடத்தத் தொடங்கினார்கள். இவர்கள் காலத்தும் சில கடன் தொல்லைகள் தொடர்ந்தன. சில கடன்கள் தீர்ந்தன. பின்னர், சச்சிதானந்த தேசிகரைப் பின்தோன்றலாக எழுந்தருளச்செய்து பேராவின்பநிலையெய்தினார்கள்.

21. ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள்

இக் குருமூர்த்திகள் ஆலயப்பணியையும் நித்திய நைமித்திக பூசைகளையும் மிகச் சிறப்பாக நடத்தி வந்தார்கள். இவர்கள் காலத்தில் கடன்களில் பெரும் பாகம் தீர்க்கப்பட்டுப் போக்கிய நிலமும் சில மீட்கப் பட்டன. இவர்கள் ஆட்சியேற்ற சிலநாளைக்குள்ளேயே மாணிக்கவாசகதேசிக சுவாமிகளை ஞானபீடத்தமர்த்திப் பேரின்பம் பெற்றார்கள்.

22. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகதேசிகசுவாமிகள்

சச்சிதானந்த தேசிகரால் அபிடேகம் பெற்ற மாணிக்கவாசக தேசிக சுவாமிகள் ஆலயத்திருப்பணி செய்வதில் மிக்க அன்புகொண்டவர்கள். திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி ஆலயம், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி ஆலயம், தருமபுரம் ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமி ஆலயம், ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி ஆலயம் ஆகிய இவைகள் திருப்பணி செய்விக் கப்பெற்றன. திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி கோயில் உள்மதில் திருப்பணி தொடங்கப்பெற்றது. அத்திருக்கோயில்கட்கெல்லாம் மகா கும்பாபிடேகம்

சிறப்புற நடத்துவிக்கப்பெற்றது. இன்றியமையாத திருவாபரணங்கள், எடுபிடிகள் முதலியனவும் செய்யப் பெற்றன.

திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவராக, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க வீற்றிருந்தருளிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இவர்களிடம் அருளுபதேசம் பெற்றவர்களாவார்கள்.

இக் குருமூர்த்திகள் ஆட்சித்திறன் பொதுப்பணிகளிலும் பெரிதும் ஈடுபட்டு உதவியுள்ளது. அதற்கு மாயூரத்திலுள்ள நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் வீடுதிக்கு ரூபாய் (10000) பத்தாயிரம் அளித்தது சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்குருமூர்த்திகளால் மடாலயத்திற்கு மூளைப்பாக்கம், மணக்குடி, திருநின்றியூர் முதலிய கிராமங்களில் நிலங்களும் நேய்தவாசலில் உப்பளமும் வாங்கப்பெற்றன. போக்கியமாக வைக்கப்பட்டிருந்த நிலங்கள் மீட்கப்பட்டன. கடன்கள் பெரும்பகுதியும் கொடுத்துத் தீர்க்கப்பட்டன.

சமயத்தொண்டாக, ஆதீன வித்துவான், சுவாமிநாத பண்டிதர் அவர்களைக்கொண்டு மாயூரத்தில் சைவ சித்தாந்த மகாநாடொன்று நடத்துவிக்கப்பெற்றது.

இவர்கள் அருளாட்சிக்காலத்தில் சென்னைமாநிலத்திலுள்ள இந்துசமய அறநிலையங்களைக் கட்டுப்படுத்த மசோதாவொன்று சென்னைச் சட்டசபையில் கொண்டு வரப்பட்டது. அதில் பல விதிகள் மிகக் கடுமையாக



தருமையாதீனம் 23ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அறநிலையங்களைப் பாதிப்பவையாக இருந்தன. அவற்றைத் திருத்தி நல்ல வகையில் வெளிவரப் பலவழிகளிலும், முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றின் பயனாகத்தான் இப்போழுது இருக்கும் திருந்திய சட்டம் வகுக்கப்பட்டது.

இக்குருமூர்த்திகள் மடாலயத்தின் திருக்கோயிலின் போருளாதார நிலையைச் செப்பனிட்டு எழுந்தருளியிருந்து 20—10—1923ல் பரிபூரணநிலையேய்தினார்கள்.

23. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகளுக்குப் பின்னர் ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்து அருட் சேங்கோல் நடாத்தியவர்கள் சுப்பிரமணிய தேசிக சுவாமிகளாவார்கள். இவர்கள் அருளாட்சியேற்ற நாள் 1923-ம் ஆண்டு அக்டோபர்திங்கள் 30ந் தேதியாகும். இவர்கள் இளமைப் பருவத்திலேயே துறவுநிலையெய்தியவர்கள். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கல்வி பயின்றவர்கள்.

மேலே கூறிய மாணிக்கவாசக தேசிகர் 29-10-23 இரவு திடீரேனபரிபூரணமடையவே அண்மையிலிருந்த இரத்தின சபாபதித் தம்பிரான் என்பவர், தாம் பட்டம் பேற்றதாகச் சோல்லிக்கோண்டு பரிபூரணமானவர்களுக்குச் சேய்யவேண்டிய கிரியைகளை மிக விரைவாக நடத்த முற்பட்டனர். அதுகாலை ஊர்காவற்றுறையார் வந்து குருமூர்த்திகள் பரிபூரணமடைந்த நிலை மிகவும்

ஐயப்பாடானது என எண்ணி விசாரணைநடத்தி இரத்தின சபாபதித்தம்பிரானைக் கைது செய்துபோயினர். மறு நாள் ஆதீனத் திருக்கூட்டத் தம்பிரான்கள் ஒன்றுகூடி ஆதீன சம்பிரதாய முறைப்படி சுப்பிரமணிய தேசிக ராகிய இக்குருமூர்த்திகளைத் தேரிந்தேடுத்து, ஸ்ரீ ஞான புரீசுவரசுவாமி கோயிலுக்கு அழைத்துச்சென்று ஆதி பரமாசாரிய சுவாமிகள் செய்யும் பாவனையில் கோமுகி யின் கீழிருத்தீ அபிடேகம்பேறச் செய்து அருட்பீடத்து எழுந்தருளுவித்தார்கள்.

இரத்தின சபாபதித்தம்பிரான்மீது குற்றச்சாட்டுகள் ஏற்பட்டு விசாரணை நடந்தது. முடிவில் விடுதலை செய்யப்பட்டது. பின்னரும் அவர் தாமே பீடத்திற்கு உரியவரேன்று மாயூரம் நீதி மன்றத்தில் வழக்குத் தோடுத்தார். முடிவில் அவ்வழக்கு இம் மகாசந்நிதானத் திற்கே வேற்றியாயிற்று. இதனிடையில் கூலி வீரர் களைக்கோண்டு குறும்புகள் பல செய்யப்பேற்றன. கட்டுப்பாடு மீறிக் கலாம் விளைக்கும்படிக் குடிமக்கள் தூண்டப்பட்டனர். பல கிரிமினல், சிவில் விவகாரங்கள் நடந்தன. எல்லா வகையிலும் மகாசந்நிதானத்திற்கே திருவருள் விளக்கம் ஒளி செய்தது. அதனோடமை யாது சேன்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப் பேற்றது.

குருமூர்த்திகள் காழிப்பிள்ளையரர்போலப் பல தலங்கட்கும் சிவிகையில் ஊர்ந்து, சின்னங்கள் ஊதாநிற்ப அடியார் குழாங்களும் அன்பர்கள் கூட்ட மும் அரகரா முழக்கஞ்சேய்ய புலவர்களும் பேருமக்களும்

ஆங்காங்கு எதிர்கோள்ளத் தல யாத்திரை சேய்தருளினார்கள். சோணுட்டுத் தலங்கள் பலவற்றிலுஞ் சேன்று விதிப்படி இறைவனை வழிபட்டு, எதிர்கோண்டழைத்து அன்புசேய்த அன்பர்கள் பலருக்கும் அருளமுதத்தினையும் திருநீற்றுச் சேல்வத்தையும் போருந்த அளித்தருளினார்கள்.

பதினாருவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த சச்சிதானந்த தேசிகருக்குப்பின் தேக்கண யாத்திரையாக குருமூர்த்திகள் யாவரும் எழுந்தருளவில்லையேன்ற குறையிருந்தது. அதை நிறைவேற்றுவான் வேண்டித் திருவுளங்கோண்ட இக்குருமூர்த்திகள் விவகாரங்கட்கு இடையிலேயும் யாத்திரைக்கெழுந்தருளினார்கள். வழியிலுள்ள மாயூரம், திருபுவனம், திருவையாறு முதலிய தலங்களை வழிபட்டுக்கோண்டு திருச்சியை யடைந்தார்கள். அங்குத் திருவாளர்கள் T. M. நாராயணசாமிப் பிள்ளை, இலால்குடி பரமசிவம் பிள்ளை, திருவரங்கம் சிங்கம் அய்யங்கார், இராவ் பகதூர் T. V. கிருஷ்ணசாமி அய்யர் உள்ளிட்ட பேருமக்கள் பலர் குருமூர்த்திகளைக் கோயில் பரிவாரங்களுடன் எதிர்கோண்டழைத்து அன்புசேய்து மாகேசுவர பூசை, பட்டணப் பிரவேசம் முதலியன சிறப்புற நடத்திவைத்தார்கள். குருமூர்த்திகள் யாவருக்கும் அருளாசி அளித்தார்கள். ஸ்ரீ தாயுமானசுவாமிகட்குச் சிறப்பாக அபிடேக ஆராதனைகள் சேய்து வழிபட்டார்கள். பின்னர், அந்நகரைவிட்டு நீங்கித் திருவேடகம் முதலியவைகளை யேல்லாங் கடந்து திருவாலவாய்

நகரை அண்மினார்கள். ஆங்குள்ள ஸ்ரீ திருஞான சம்பந்தராதீனத்தார்களும், கனம் P. T. இராசன் முதலாகிய ஏனைய பெரியார்களும் கோயில் பரிவாரங்களோடு குருமூர்த்திகட்குச் சிறப்பாக வரவேற்பு அளித்தார்கள்.

பின்னர், குருமூர்த்திகள் அங்கிருந்தும் புறப்பட்டுச் சிந்துபூந்துறை, ஸ்ரீ வைகுண்டம் முதலிய பதிகளை வழிபட்டுத் திருச்செந்தூரை அடைந்து முருகப்பெருமானை இறைஞ்சி இன்பக்கடலுள் திளைத்தார்கள். மீண்டு வருங்கால், திருநெல்வேலியில் மேடை தளவாய் முதலியார் அவர்களும் கோட்டைப் பிள்ளைமார்களும், ஏனைய அன்பர்களும் வரவேற்று உபசரித்து சோக்கநாத பூசை, மாகேசுவர பூசை, பட்டணப்பிரவேசம் முதலியனவும் சிறப்புற நடத்துவித்தார்கள். அதில், மேடை தளவாய் திருமலையப்ப முதலியார் அவர்களும், அன்னார் குமாரர்களும் சோக்க நாதருக்குக் கனகாபிடேகம் செய்வித்தது குறிப்பிடத்தக்கது. அவ்விடத்தில் திருவாவடுதுறை யாதீன சம்பந்தமான தலங்களைத் தரிசிக்குங்கால் அவ்வாதீன கர்த்தரவர்கள் சார்பில் உபசரிக்கப்பட்டார்கள். பாபவிநாசம், குற்றாலம், தேன்காசி, ஸ்ரீ வில்லிப்புத்தூர், பரங்குன்று முதலிய தலங்களை வழிபட்டுக்கோண்டு பிரான்மலைக்கு வருங்கால் திருவண்ணமலையாதீனத்தார்களால் வரவேற்கப்பட்டு உபசரிக்கப் பேற்றார்கள். இவ்வாறு ஆங்காங்குள்ள அன்பர்கள் பலரும் மாகேசுவரபூசை, பட்டணப்பிரவேசம் முதலியன சிறப்புற நடாத்திப் போற்ற இறை

வழிபாடுசெய்த குருமூர்த்திகள் யாத்திரையை முடித்துக் கொண்டு தருமைக்கு எழுந்தருளினார்கள். அவ்வமயம் மாயூரத்தில் நகரப்பெருமககள் வரவேற்று வரவேற்புரை மடல் ஒன்று படித்துக் கொடுத்தனர். பின்னர் தருமையம்பதி வந்தடைந்து அருட்செங்கோல் நடாத்தி யருளினார்கள்.

இங்ஙனமிருக்குங்கால் சம்பிரதாய நூல்களையும், சைவசித்தாந்த நூல்களையும் அச்சுவாகனமேற்றி அன்பர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருந்துவிளங்க இலவசமாக வழங்கினார்கள். ஆதீன வித்வத் சிகாமணி சுவாமிநாத பண்டிதர் அவர்களைக்கொண்டு கும்பகோணத்தில் மகாமக காலத்தில் சைவசித்தாந்த மாநாடு கூட்டுவித்துச் சைவநற்பயிர் தழைக்கச் சொற்பொழிவு மழை பெய்வித்தார்கள்.

இக்குருமூர்த்திகள் செய்தருளிய ஆலயத் திருப்பணிகள் மிகப்பல. ஆதீன பரிபாலனத்திற்குட்பட்ட சீகாழி, திருக்கடவூர், மணக்குடி, கோளிலி, மறியலூர், விளநகர் ஆகிய கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டுக் கும்பாபிடேகமும் நடத்துவிக்கப்பெற்றன. திருவையாறு அறம் வளர்த்த நாயகி பாலாலயமும், மாயூரம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் மகா கும்பாபிடேகமும் நடைபெற்றதும் இக்குருமூர்த்திகளது ஆட்சிக்காலத்தேயாம். செம்பொன்னார்கோயில் என்னும் தலத்தில் கோயில்கொண்டிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்குக் கட்டளை ஒன்று ஏற்படுத்தியுள்ளார்கள்.

. ஆதீன மடாலயத்திற்கு வெள்ளி நாற்காலிப் பல்லக்கொன்று செய்யப்பெற்று எடுபிடிகள் சிலவும் புதுபிக்கக்கப்பெற்றன. திருப்பனந்தாள் ஸ்ரீ அருண ஜடேசுவரசுவாமி ஆலயத்திற்கு வெள்ளிப் பல்லக்கும் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி ஆலயத்திற்கு வெள்ளிப் பல்லக்குடன் சில எடுபிடிகளும் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி ஆலயத்திற்குச் சிறந்த வேலைப்பாடுடைய வெள்ளித்தேர் ஒன்றும் செய்து வைக்கப்பெற்றன. திருவாரூர் தியாகராசர் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்திற்கு அஷ்ட பந்தன மகாகும்பாபிடேகம் நடத்துவிக்கப்பட்டது. தேர் செய்வதற்காக ரூ. 5000 கொடுத்தருளினர்கள். வெள்ளிப் பல்லக்கும், வெள்ளி யானை வாகனமும் செய்வித்தருளினர்கள்.

ஆதீன வித்துவான்களாக சீகாழி வித்வத் சிரோமணி, ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களையும், அவர்கள் குமாரர் ப. மு. சோமசுந்தரம் பிள்ளை M. A., L. T. அவர்களையும், காழி சிவ. கண்ணு சாமி பிள்ளை B. A, அவர்களையும் ஏற்றுத் தமிழும் சைவமும் ஆக்கமுற நற்பயன் அளித்து வந்தார்கள். ஆதீனத்துப் புலவர் திலகமாக விளங்கியவர்களும், ஆதீன வெளியீடுகளாக வருகின்ற பண்டார மும்மணிக் கோவை போன்ற சாத்திர நூல்கட்குக் குறிப்புரை முதலியன எழுதியருளியவர்களுமாகிய சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகளும் இக்குருமூர்த்திகளிடத்தில் உப தேசம் பெற்றவர்களே.



தருமையாதீனம் 24ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஒவ்வோரு தேவஸ்தானத்துக்கும் சேன்று தங்கிச் கோவில் கணக்குகள் ஒழுங்காக வைத்துவரவும், காரியங்கள் சரியாக நடக்கவும் திட்டம் வகுத்து ஏற்பாடு செய்தார்கள். ஆதீன மடாலயம் தற்போது அடைந்துள்ள எல்லா வகையான முன்னேற்றத்திற்கும் இவர்களே மூலகாரண முதல்வர் எனக்கூறுதல் மிகையாகாது.

சென்னை இந்து மதமான்ய சட்டம் நடைமுறைக்கு வந்ததும் ஆதீன மடாலயத்திற்கும், தேவஸ்தானங் களுக்கும் அதன் விதிகளிலிருந்து விலக்குப் பெற்றார்கள்.

கனம், சென்னை உயர்நீதிமன்றம் நீதிபதி ஜஸ்டிஸ் ராமேசம், ஜில்லா நடுவர் V. R. குப்புசாமி ஐயர், Sri C. P. இராமசாமி ஐயர், கனம். P. T. இராசன் முதலிய வர்களை மடத்துக்கழைத்து விருந்தளித்தார்கள்.

இவ்வாறு குருமூர்த்திகள் பல்லாற்றானும் தமிழுக் கும் சமயத்திற்கும் நற்பணிகள் பலபுரிந்து ஞானபாநு வாய் விளங்கி ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகட்கு முறைப்படி அபிடேகம் செய்வித்துப் பீடத்தமர்த்தி 1933 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாள் பரிபூரண நிலையை யெய்தினார்கள்.

24. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள்

இக்குருநாதர் ஆட்சியேற்ற நாள்முதல் சித்தாந்த சைவ நூல்களைப் பரப்பும் திருப்பணியில் ஈடுபட்டுச்

சிறந்த தெய்வத் தமிழ்ப் பனுவல்களை வழங்கியருளி ஞர்கள். ஆதீன மடாலயத்தின் முகப்பில் புத்தகசாலை ஒன்று அமைத்துப் பாதுகாத்தார்கள்.

மடாலயத்தின் பல பகுதிகளையும் புதுப்பித்துத் திருப்பணி புரிந்தார்கள். தூய்மையும் அழகும் துணை நின்று இலங்க, தருமபுரம் ஊரையே ஒரு முன் மாதிரிச் சிற்றூராக (Modal Village)ச் செய்தருளிய திறம் இவர்களையே சாரும். நல்ல சாலை அமைப்பும் திருத்த மான கட்டிட அமைப்பும் செய்து, வருவோர் சிந்தையை அள்ளும் வண்ணமாய்த் தருமை திகழப் பல பணிகளைச் செய்தார்கள்.

இது பத்திரிகை உலகம்; ஆதலால் சித்தாந்த சைவச் செந்நெறியை நாடு நன்குணரவும், நல்லறிஞர் களின் நல்லுரைகளால் நாடு பயன் பேறவும் "ஞான சம்பந்தம்" எனப் பெயரிய மாதப் பத்திரிகை ஒன்றைத் துவக்கினார்கள். அதனை அச்சிடுவதற்காக "ஞான சம்பந்தம் அச்சுக்கூடத்தையும் மிக்க பொருட் செலவில் நிறுவினார்கள்.

தெய்வத் தமிழ் வளர்க்கும் தேவார பாடசாலை நிறுவிச் சைவ இளைஞர் தேவாரம் பயிலப் பெருவாய்ப்பு அருளினார்கள். அம்மாணவர்க்கு இலவச உணவு வீடுதியையும் நிறுவினார்கள். திருக்கோயில்களில் நெறியான பூசை முறைகள் நிலவ வேண்டி ஆகம பாடசாலை ஒன்றையும் அமைத்தருளினார்கள். அதிற் பயிலும் மாணவர் அனைவர்க்கும் இலவச உணவு

வசதியும் அளித்தருளினார்கள். இளஞ் சிறுவர்களுக்கு எழுத்தறிவிக்கும் ஆரம்பப் பாடசாலை ஒன்றும் நிறுவிப் புரந்தருளினார்கள்.

ஆதீன ஆளுகைக்குட்பட்ட பல திருக்கோயில் களிலும் பலப்பல திருப்பணிகள், அலுவலகக் கட்டிடங்கள் அமைப்பு, திருக்குளத் திருத்தங்கள் முதலிய வற்றை அமைத்தருளினார்கள். அவற்றால் தருமை ஆதீனக்கோவில் என்றால் அதற்கோரு தூய்மை உண்டு என்ற இலக்கணத்தைத் தெளிவுறுத்திக்காட்டினார்கள். ஆதீனத் திருக்கோயில்கள் வளமடைந்து வரலாயின.

திருக்கோயில்களில் விழாக் காலங்களில் சமய விரிவுரைகள் நடக்க ஏற்பாடுகள் புரிந்தார்கள். சிவஞானபோத மாநாடு போன்ற பல மாநாடுகளைக் கூட்டிச் சித்தாந்தத்தேன் அனைவரும் உண்ண வாய்ப்பு அருளினார்கள். புலவர்களைக்கொண்டு மடாலயங்களில் சிறப்புச் சொற்பொழிவுகளாற்றச் செய்து பரிசுகள்வழங்கினார்கள். தமிழ்நாட்டில் சமய மாநாடு, கல்லூரிகளிற் பயிலும் ஏழை மாணவர்களுக்குப் பொருளுதவி புரிந்தருளினார்கள்.

இவர்கள் அருளாட்சிக் காலத்தில் மடாலயங்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய மசோதா ஒன்று சென்னை அரசில் நிறைவேற இருந்தது. அது நிறைவேறினால் உண்டாகக் கூடிய தடைகள் சமய உலகிற்குப் பேரிழப்பை உண்டுபண்ணக் கூடுமாதலின் அது

தள்ளுபடியாதற்கு வேண்டிய செயல்களை முடிவித்தருளிய பெருமை இக்குருமூர்த்திகளுக்கு உண்டு.

மடாலய முக்ப்பு, பந்திக்கட்டு, பண்டாரக்கட்டு, பூசைமடம், ஒடுக்கம், நிர்வாகக்கூடம், சரக்கறை, இருமுகப்புக்கள் (அப்பர் நிலையம், சம்பந்தர் நிலையம்) சாந்த நிலையம், மெய்கண்டார் நிலையம் ஆகியவை திருத்திப் புதுப்பிக்கப்பேற்று நிகழ்ந்தன. நான்கு திருவீதிகளிலும் வீடுகள் பல கட்டப்பட்டு மின்சார விளக்குகளும் போடப்பட்டன.

தமது குருநாதர் மீது தாங்கோண்ட பக்தியின் நினைவாக வடக்குவீதி ஓரமாகக் காவிரிக்குச் செல்லும் வழியில் ஓர் அழகிய வளைவு (Arch) கட்டச் செய்தார்கள்.

மடத்தின் முன்புள்ள திருத்தொண்டர் குளம் முதலிய தீர்த்தங்களை நன்கு கட்டியும், சித்திநாயகர் திருக்கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்தும் தேரடிகளைத் தூக்கிக் கட்டியும் பல பணிகளைத் தம் ஆட்சிக் காலத்தில் புரிந்தார்கள். இந்திய 'அரசினர் நிகழ்த்திய போர் முயற்சிக்கு உதவிபுரிந்தார்கள். வேளூர்த் திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்தருளினார்கள். திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரர் திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்தருளினார்கள். திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரர் திருக்கோயிற் கீழைக்கோபுரம் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தருளினார்கள். இப்படிப் பல துறையிலும் சிறப்பான பணி பல புரிந்தார்கள்.

1943ல் தென்னுடு கண்டிராத முறையில் பத்தாண்டு விழாக்கோண்டாடினுர்கள். மெய்கண்டான் சித்தாந்த மாநாடு கூட்டியருளினுர்கள். தமிழகத்தின் தலைசிறந்த சித்தாந்த சைவப் பேரறிஞர்களையும், தலைவர்களையும் தருமைக்கு அழைப்பித்து மாநாட்டைத் திறம்பெற நடப்பித்தார்கள். தமிழகத்தின் தலைசிறந்த தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளை வியந்து போற்றி விவரித்தன. ஆதீனப் புலவர்களாகப் பல பேரறிஞர்களை ஏற்றுச் சிறப்புச் செய்தருளினுர்கள்.

இவ்வாறு பலதிறத்திலும் பணிபல புரிந்த இக் குருமூர்த்திகள் தமக்குப் பிற்ருேன்றலாக நல்ல அநுபவ ஞானமும், புலமையும், நிர்வாகத்திறமையும் உள்ளவர் களும், இப்போது 25 ஆவது குருமகாசந்நிதானமாக வீற்றிருப்பவர்களுமாகிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களுக்கு ஞானுேபதேசம் செய்து, பார்த்திபஞூ வைகாசிமீ பூர்வ பட்சம் நவமி திதி (1945) அன்று முத்திநிலை எய்தியருளினுர்கள்.

25 ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

இப்போது அருளாட்சி புரிந்துவரும் 25 ஆவது குருஞானசம்பந்த மூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமி களவர்கள் ஆட்சியேற்ற காலந்தொடங்கிச் செய்து வரும் அறப்பணிகளும் அருட்பணிகளும் பலப்பல.

தூய திருவுளப்பாங்குடைய இக் குருநாதர் தோட்டது எல்லாம் பெருகித் தழைத்து செழித்து வருகின்றன. திருக்கயிலாய பரம்பரையைக் கண்கூடாக அனைவருங் காண விளக்கம் காட்டும் ஞானவேந்தர் இவர்கள். இவர்கள் ஞான அரசில் சமயமும் தமிழும் நாடும் பெற்றிருக்கும் அருட்பயன்கள் மிகப்பலவாக உள்ளன. நல்ல தமிழ்ப் புலமையும், இலக்கிய நாட்டமும், சமய சாத்திரங்களிற் றேய்வும், உறைப்புடைய திருவுள்ளமும், சிவபிரான் திருவடிக்கே பதித்த நெஞ்சும், மேடைகளில் தக்க பொருள்பற்றிக் கற்றோரும் மற்றோரும் வியப்ப விரிவுரையாற்றும் திறமும் உடைய சிவஞானக் கதிரவனாக இக் குருநாதர் எழுந்தருளியிருந்து தவம் பெருக்கி வருகின்றார்கள்.

திருச்செந்தூர், சிதம்பரம், சுசீந்திரம், திருநெல்வேலி, மலைக்கோட்டை, சீகாழி, திருக்கடவூர், பட்டவிளாகம், ஆலவேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மடங்கள் திருத்திப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தருமையாதீன மடாலயத்தைச் சார்ந்த திருக்குளத் திருப்பணியை இவர்கள் தொடர்ந்து புரிந்துள்ளார்கள்.

அருணந்தி நிலையம், மறைஞானசம்பந்தர் நிலையம், உமாபதி நிலையம், சுந்தரர் நிலையம் ஆகியவற்றை அழகுற நல்ல பொருட் செலவிற் கட்டியிருக்கிறார்கள்.

பதினெட்டு கரங்களையுடைய ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவியை ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோயிலில்

வடமேற்குத் திசையில் நிறுவித் திருக்கோயில் கட்டிக் கும்பாபிஷேகமும் நிகழ்த்தியிருக்கிறார்கள். நாள் தோறும் பூசனை நன்கு நடைபெற வைத்து நல்லருள் பெருக்கி வருகிறார்கள். அன்பர்கள் திரளாக வந்து வழிபட்டு அம்மையின் தண்ணருள் பெற்று வருதல் கண்கூடு. அக் கோயிலின் கோபுரவாயிலைக் கட்டிச் சிற்பச் சிறப்புக்களை அதிற்காட்டச் செய்து அழகுறுவித் திருக்கின்றார்கள்.

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் பூசைமடம், விமானம் கலசம் திருப்பணிகள் செய்யப்பெற்றன. சலவைக் கல்லிட்டுச் செப்பனிட்டு நல்ல மின் விளக்குகளும் பொருத்தியிருக்கிறார்கள். செந்தமிழ்ச் சொக்கர் கரு வறைக் கதவுகளை வெள்ளியினாலாக்கி யுள்ளார்கள். ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில், ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோயில்கள் திருத்திப் புதுப்பிக்கப் பெற்றுக் கும்பாபிஷேகமும் கொண்டுள்ளன.

திருத்தேர்கள் இரண்டும் திருத்தப்பெற்றன. மடாலயப் பகுதிகளில் சலவைக்கல் தளவரிசைகளும், கச்சேரிக்கட்டு வாயிற்படி திருத்தமும் பிறவும் குறிப் பிடத் தக்கவை.

ஞானசம்பந்தம் அச்சகத்தை அடுத்திருந்த வாகன அறையைத் தூய்மையாக்கி வைத்திருப்பதோடு உக் கிராணப் பகுதியை நன்கு பலர் உண்ணும் பந்திக் கட்டாக நல்ல ஒளி காற்று வசதிகளோடு செய்தருளி யிருக்கிறார்கள்.

"சண்முக விலாசம்" என்ற பெயரால் தம் குரு பக்தி தோன்ற மேலவீதியில் அமைந்திருக்கும் திருமாளிகையைச் சிறப்புறக் கட்டி முடித்திருக்கின்றார்கள்.

தருமையாதீனத்தின் குருமூர்த்திகள் அடைந்த இடங்களிலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்துத் திருத்திக் கட்டியருளினார்கள். காவிரியாற்றுக்குப் போகும் வழியில் அமைந்த அக் குருமூர்த்தங்கள் அனைத்தும் நன்கு திருத்திக் கட்டப்பெற்றுள்ளன. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகட்குத் தம் குருபக்தி தோன்ற ஓர் ஆலயம் எடுப்பித்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக தேசிக சுவாமிகள் இவர்களது குருமூர்த்தத்தை யொட்டி ஆலயம் எடுப்பித்துத் திருப்பணி செய்து உள்ளார்கள்,

தருமையாதீனக் குருமூர்த்தங்களில் மூன்றாவது, ஐந்தாவது குருமூர்த்தங்களைப் புதுப்பித்துத் திருப்பணி புரிய வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார்கள். அவ்வண்ணமே இவ்விரண்டு குருமூர்த்தங்களையும் திருத்திப் புதுக்கி வரும்போது திருவருள் உணர்த்த ஒன்பதாவது குருமூர்த்தத்தை (ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள்)யுங் கட்டித் திருப்பணி புரிந்து கும்பாபிஷேகம் செய்தருளும் வண்ணம் திருவுள்ளம் கொண்டார்கள். இக்குருமூர்த்தங்கள் இவ்வாண்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பெறுகின்றன

இமாலயப் பெருஞ் சிகரங்களுக்கு யாத்திரை சென்று முடித்துள்ளார்கள். திருக்கேதார யாத்திரை நேபாள யாத்திரை, அமரநாத யாத்திரை, ஆகிய முப்பெரும் யாத்திரைகளை முடித்தருளியபின் திருக் கயிலாய பரம்பரை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் திருக்கயிலாய யாத்திரையையும் இவ்வாண்டில் முடித் தருளிக் கயிலைப்பெருமான் திருவருளைக் கொண்டு மீண்டுள்ளார்கள். அப்பர் சுவாமிகள் காரைக்கால் அம்மையார், சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமான், பெருமிழலைக் குறும்ப நாயனார் முதலிய அருளாளர்கள் சென்று வழிபட்ட திருக்கயிலாயப் பெருமலை யாத்திரையை இவ்வாதீன வரலாற்றிலேயே முதன் முதலாக ஒரு குருமூர்த்திகள் செய்தருளுவது என்பது இதுவேயாகும். இந்தப் பெருமை ஆதீன வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப் படவேண்டிய பெருமையாகும். தம்முடன் மெய்யடியார் சிலரையும் துணைக்கொண்டு சென்று அவர்களுக்கும் கயிலாயநாதன் தண்ணருள் கூட்டிய பெருந்தகைமை இக் குருநாதர்க்கு உண்டு.

தருமையாதீனத்திலேயே தமிழ் வித்துவான் படிப் பும், வடமொழிச் சிரோமணி வகுப்பும் பயிற்றுவிக்கும் தமிழ் வடமொழிக் கல்லூரிகளை நிறுவி நடத்தி வருகின்றார்கள். கீழைக்கலை உயர்நிலைப்பள்ளி ஒன் றையும், உயர்நிலைப்பள்ளி பிறிதொன்றையும் ஆதி பரமாசாரியர் திருப்பெயரால் நடத்தி வருகின்றார்கள். மாநாடுகள் சிறப்புற நடைபெறுவதற்கும், மற்ற சமயப் பணிகள் நிகழ்வதற்கும் பேரு வாய்ப்பாக

மடாலய முகப்பில் குளக்கரையில் அமைந்திருந்த கோட்டகையை மிக்க பொருட்செலவில் தகரக் கோட்டகை ஆக்கி, ஒளி அமைப்பு, காற்று வசதிகளோடு திருநெறிய தேய்வத் தமிழ் மன்றம் என ஆக்கியருளியிருப்பதும் இவர்கள் தனிப் பெருஞ் சிறப்பாகும்.

மடாலயத்தை அடுத்துள்ள திருக்குளத்தைத் திருத்திச் செப்பனிட்டு இருகரைகளிலும் நல்ல கட்டிடங்களை எழுப்பி வருகின்றார்கள். திருக்குளத்தின் கீழ்க்கரையில் ஆதி பரமாசாரியர் திருப்பெயரால் ஒரு பூங்காவினையும் உருவாக்கியருளியிருக்கின்றார்கள்.

ஆதீனச் சார்பில் ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையையும் திறம்பெற நடத்தி வருகின்றார்கள்.

திருக்கயிலாய யாத்திரை நினைவு வளைவுகள் இரண்டை, ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலுக்கு முன்பும் ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோயிலுக்கு முன்பும் கட்டியருளித் தக்காரைக்கொண்டு திறப்பு விழாவும் நடத்தியருள்கின்றார்கள். இவ்விரண்டு வளைவுகளும் திருக்கயிலாய பரம்பரையின் உருவ விளக்கமாகத் திகழ்ந்து ஒளிரும் என்பது உறுதி.

இமாலய யாத்திரைகளேயன்றி நம் பாரதநாட்டு மற்ற யாத்திரைகளும் செய்து முடித்தருளியுள்ளார்கள். அண்மையில்தான் பன்னிரண்டு ஜோதிர்லிங்க தரிசனமும் செய்து நிறைவேற்றியுள்ளார்கள். அன்றியும் தொண்டைநாட்டு யாத்திரை, மலையாளநாட்டு யாத்திரை

முதலிய அனைத்து யாத்திரைகளையும் அன்பர் பலருடன் சேன்று கண்டருளியுள்ளார்கள்.

மக்கட் பணிகளாக இக்குருமூர்த்திகள் இயற்றி வரும் நல்லறங்களும் மிகப் பலவாகும். மாயூரத்தில் மகப்பேறு மருத்துவச்சாலை, அதில் குடிநீர்க் குழாய் அமைப்பு, தருமபுரம் ஊர் மக்கள் குடியிருப்பு, அதற்குத்தானேயியங்கும் தண்ணீர்க் குழாய் அமைப்பு, முதலிய பலப்பல நிலையங்களில் பலப்பல துறைகளில் மக்கட்பணிகளை இயற்றி யருளி வருகிறார்கள்.

சென்னையில் சமயப்பிரசார நிலையம் தோற்றுவித்து, அதன்மூலம் தலைநகரத்திலும் தலைநகரைச் சார்ந்த சிற்றூர்களிலும் சமயப் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள். கன்னடம், தெலுங்கு மலையாளம், இலங்கைப் பகுதிகளிலும் நம் ஆதீனச் சமயப் பிரசாரகர்களைக்கொண்டு, சமயப்பிரசாரம் செய்தருளி வருகிறார்கள். இதற்கென வாங்கப்பெற்றுள்ள உந்தூர்திகளும் நன்கு பயன்படுத்தப்பெற்று வருகின்றன.

திருக்கடவூர், பரசலூர், விளநகர், பேரளம், திருத்தருமபுரம், சீகாழி, வேளூர், திருநின்றியூர், திருமுல்லைவாசல், திருக்குறுக்கை, தலைஞாயிறு, கருங்குயில் நாதன்பேட்டை, மணக்குடி முதலிய ஊர்களிலும் அமைந்துள்ள திருக்கோயில்கள் கும்பாபிஷேகம் செய்ய பெற்றுள்ளன. மிக்க பொருட்செலவில் நிகழ்த்தப்பெற்ற இக்கும்பாபிஷேகங்கள் மிகச் சிறந்த முறையில் நிகழ்த்தப்பெற்றுள்ளன. இன்னும் பல ஆலயங்களையும்

திருப்பணி செய்து வருகிறார்கள்; விரைவில் கும்பாபிஷேகம் செய்யவும் திருவுளம்பற்றியிருக்கிறார்கள்.

ஆதீனத் திருக்கோயில்கள் அனைத்திலும் இக் குருமூர்த்திகள் அருளாட்சிக்கு வந்தபின் நடந்திருக்கும் திருப்பணிகள் பலவாகும், அவற்றுள் இன்றியமையாத சில விவரங்களை இங்கு நோக்குவோம்.

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் பிரமதீர்த்தம் வண்டல் படிந்து நீர் அடிக்கடிக் கெட்டுப் போவதால் இயந்திரங்களைக் கொண்டு இறைத்துத் தூய்மையாக்கப்பட்டிருக்கிறது. ஓர் அலுவலகமும், களஞ்சிய அறையும் கட்டப்பட்டுள்ளன. சுவாமி கோயில் வடக்குத் திருமதில் இடித்துக் கட்டப்பட்டது. சுவாமி சந்நிதிக்கெதிரேயுள்ள பிடாரி கோயில் கீழவீதி விநாயகர் ஆலயம் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகங்கள் செய்யப்பெற்றன. சுவாமிகோயில் முன் மண்டபம் தெற்குத் திருமாளிகைப் பத்தியில் கருங்கல் தளவரிசை போடப்பெற்றுள்ளது. மேலைத் திருமதில் மேலக்கோபுரத்திற்கு வடபுறம் உள்ளதும் வடக்குத் திருமதில் வடக்குக் கோபுரத்திற்கு மேற்பால் உள்ளதும் முழுதும் பிரித்துக் கருங்கல் வரிவிட்டுக் கட்டப்பெற்றுள்ளன. மலைப் பிராகாரத்திலிருந்து மலைக்குள் போகும் வழியில் வழிதிறந்து சுவர் எழுப்பிக் கதவு நிலைகள் வைத்துக் கட்டப்பெற்றுள்ளன. சுவாமி கோயில் மண்டபங்கள் திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் முதலியன முழுதும் பெருஞ் செலவில் பழுது பார்க்கப் பெற்றுள்ளன.

அம்மன் கோயில் வடபுறம் திருமணப்பத்தி மண்டபம், ஸ்ரீ திருஞான சம்பந்தர் கோயில், திருப்பணி செய்யப்பெற்றுள்ளன. பிரம தீர்த்தத்தின் தென்புறம் படித்துறையில் (திருமுலைப்பால் சம்பந்தப் பெருமானுக்கு அருளிய இடம்) ஓர் அழகான வளைவு கட்டி இந்த வரலாற்று நிகழ்ச்சியை உணர்த்தும் சிற்பங்களை அதில் அமைத்தும், திருமதிலில் கோபுரசாலை கட்டி அம்மையப்பர் திருவுருவம் அமைத்தும் இருக்கிறார்கள். சுவாமிகோயில் அர்த்த மண்டபத்தில் திருவாபரணச் சாலைக் கவசம் அமைக்கப்பட்டுள்ளது. ஆஸ்தான மண்டபம், நடராசர் சந்நிதி, மகாலட்சுமி, சுப்பிரமணியர், முதலிய சந்நிதிகளுக்கு இருப்புக் கதவுகள், திருத்தேர்களுக்குத் தகரக்கோட்டகை, மகாமண்டபம் முதலியன செய்யப்பெற்றுள்ளன. சுவாமி சந்நிதிக்கு எதிர்ப்புறப் பிள்ளையார் குளம் வெட்டப்பட்டுப் படித்துறையும் கட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ கணநாதருக்கு ஓர் ஆலயம் எடுத்து விக்ரகப் பிரதிட்டையும் செய்து கும்பாபிஷேகமும் (24-5-59ல்) நிகழ்த்தப் பெற்றுள்ளது.

முருக நாயனார், திருநீலகண்ட நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், முதலிய விக்ரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றன. கயிலாச வாகனம், ஆட்டுக்கடா வாகனம், சூரன் வாகனம் இம் மூன்று மரவாகனங்களும் செய்யப் பெற்றுள்ளன. தெற்குவீதியில் விருந்தினர் விடுதி கட்டப்பட்டுள்ளது. தேர்வடங்கள் நான்கு

தயாரிக்கப்பட்டுள்ளன. மகாமண்டபம், அர்த்தமண்டபம், நன்கு திருத்தப்பட்டுள்ளன. சம்பந்தர் உற்சவ மூர்த்திக்குப் புதிய முறையில் சந்நிதி அமைத்து வரலாற்றுச் சித்திரங்களும் வரைவித்துக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. சுவாமி கோயிற் பள்ளியறை புதிதாகக் கட்டப்பெற்றது. கோபுரம் கதவுகள் வர்ணம் தீட்டி சோமாஸ்கந்தர் சந்நிதி திருத்தப்பட்டது. கீழக்கோபுரம், சுவாமிகோயில் கட்டைக் கோபுரங்கள் இரண்டும் தளவரிசை உயர்த்திப் போடப்பட்டன. யானைக்கோட்டகை கட்டப்பட்டது.

ஸ்ரீ பைரவர் ஆலயம், அக்னிபுரீசுவரர் கோவில் அண்டநாதர் கோயில் கும்பாபிஷேகங்கள் நடத்தப் பெற்றுள்ளன. சட்டநாதன் குளம் நன்கு வெட்டப்பட்டது. அய்யனூர் குளம் வெட்ட உதவிநிதியளிக்கப் பட்டது.

புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்:- இத் திருக்கோயில்கள் பல பகுதிகளிலும் திருவிளக்குகள் இடப்பெற்றன. சுவாமிசந்நிதி தட்டஞ்சுற்றி மண்டபத்தைச் செம்மைப்படுத்தி இத்தலத்திற்குரிய பதிகங்கள் எழுதப்பெற்றன. சண்முக விலாச பிரசார மண்டபமாக இது விளங்குகிறது, சமயப் பிரசங்கங்கள் நடைபெறவும் யாத்ரிகர்கள் தங்கவும் இந்நிலையம் வசதியாக இருக்கிறது.

தெற்குத்திருமதில் மேலை இராஜகோபுரத்திற்குத் தென்புறமுள்ள மேலைத்திருமதில் புதிதாக எடுப்பித்

துள்ளார்கள். யானைகட்டு மண்டபம் கட்டப்பெற்றுள்ளது. கோயில் உட்சுற்றிலும் பெருங்கற்றள வரிசை இடப்பெற்றுள்ளது.

நடராசர்க்கும் அங்காரகனுக்கும் மஞ்சங்கள் செய்யப்பெற்றுள்ளன உற்சவ மூர்த்திகளுக்கெல்லாம் பீடம்இடப்பெற்றது. முடியிறக்குக் கொட்டகை தகரத்தாற் போடப்பெற்றது.

இராம தீர்த்தம், நயினர் தோப்புக்குளம், சந்தனக்குழம்பு மண்டபம் திருத்தப்பெற்றுள்ளன. சுவாமி, அம்மன், ஆறுமுககுமாரர் முதலிய கடவுளர்க்கு அஷ்டபந்தன சுவர்ணபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தியருளினர்கள். சூரன், விநாயகர், திருமுறை, ஜடாயு, யோகசக்தி - மஞ்சங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. ஆறுமுகர், செல்வ முத்துக்குமார சுவாமி சந்நிதிகளுக்குப் பித்தளைப்படிகள் செய்யப்பெற்றுள்ளன. திருமதில்கள் இடிந்திருந்தவை புதுப்பிக்கப்பட்டுள்ளன. அம்மன் சந்நிதி தட்டஞ்சுற்றி மண்டபம் பழுது பார்க்கப்பெற்றது. சந்தனக்குழம்பு மண்டபம் நன்கு வசதி செய்யப்பெற்றது. கிணறு, வாகன மண்டபம், சுவாமி சந்நிதி இருப்புக் கிராதிகள் போடப்பட்டது. மாட்டுக்கொட்டகைகள் புதிதாகக்கட்டப்பட்டன. பசுமடம் ஒன்றும் தக்க முறையில் நிறுவப்பெற்றுள்ளது. யாக சாலை முன்புறம் ஒரு தகரக்கொட்டகை போடப்பெற்றுள்ளது.

ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிக்கு நவரத்னக் கவசத் திருப்பணி நடந்து வருகிறது. வைத்தியநாதர்,

வாலாம்பாள், ஆறுமுகர், தங்கக்கவசங்கள் செய்யப் பேற்றுள்ளன. வேள்ளிமஞ்சம் ஸ்ரீ சேல்வ முத்துக் குமாரசுவாமிக்குச் செய்யப்பேற்றுள்ளது. யாத்திரிகர் விடுதி கட்டப்பேற்றுள்ளது. திருமுறைப்பயிற்சி தரப்படு கிறது. அநாதை நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது.

குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம் திருக்கோயில் பல திருப்பணிகள் செய்யப்பேற்றுப் புதுப்பிக்கப்பேற்றது. 1—2—60 அன்று கும்பாபி ஷேகம் செய்யப்பேற்றது.

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ் தானம் :- பழுதுபட்டிருந்த இரண்டாங்கோபுரம் வர்ணம் வைக்கப்பேற்றது. மேலே இராசகோபுரம் திருத்தப் பேற்றது. சுவாமி கோயில் தேற்கு, வடக்குப் பிராகாரங் கள் தளவரிசை யிடப்பட்டன. திருமாளிகைப்பத்தி மண்டபம், திருமடைப்பள்ளி பழுதுபார்க்கப்பேற்று உள ளன. நந்தவனம் திருத்தப்பேற்றுள்ளது. ஸ்ரீசரபமூர்த்தி சந்நிதியில் இருப்புக் கதவும், தகரக்கோட்டகையும், அம்மன் சந்நிதி, சுப்பிரமணியர் சந்நிதி, நவக்ரக சந்நிதி முதலியவற்றுக்கு கம்பிக்கிராதி அடைப்புகளும் போடப் பேற்றன. குடி தண்ணீர்க் குழாய்கள் (தானே இயங்குவன) அமைக்கப்பேற்றுள்ளன. அலுவலகக் கட்டிடம் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. இது போன்ற திருப்பணிகள் பலப்பல.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரர் தேவஸ்தானம்:- பல திருப்பணிகள் செய்யப்பேற்றுள்ளன. அலுவலகக்

கட்டிடம், கட்டளை மடம் முதலிய திருத்தலங்களும் ஏனைய பல பணிகளும் செய்யப்பெற்று உள்ளன. இன்னும் பல நிலையிலும் இதனைச் சீர்திருத்திப் புதுப்பித்து வருகிறார்கள் நம் கயிலைக் குருமணி அவர்கள்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்:- ஆண்டுதோறும் செய்துவரும் திருப்பணிகளோடு இத்திருக்கோயில் புதுப்பித்து, பலப்பல திருப்பணிகள் முற்றுவிக்கப்பெற்றுச் சரித்திரப் புகழ்பெற்ற கும்பாபிஷேகமும் செய்யப்பெற்றது. அமிர்தபுட்கரணி தீர்த்தத் தூய்மை, பிராகாரம் தளவரிசை - முதலியன செய்யப்பெறுகின்றன. கட்டைக்கோபுரம் கட்டப்படுகிறது. யாத்திரிகர் விடுதி கட்டப்பட்டுள்ளது. புதியதேர் செய்து உற்சவத்தில் ஓட்டப்பெற்று வருகிறது. போது மக்கள் குடிநீர் வசதிக்காகத் தானே இயங்கும் குழாய் வசதி செய்யப்பெற்றுள்ளது.

பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானம்:- விமானம் இராஜகோபுரங்களில் சுதை வேலைசெய்து வர்ணம் இட்டு, கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், கருங்கற்றளவரிசை செய்யப்பெற்றுள்ளன. மதிற் சுவர்கள் பூச்சுப் பூசப்பெற்றுள்ளது. பரிவார தேவதைகளுக்கும், சுவாமி அம்பாளுக்கும் அஷ்டபந்தனம் சார்த்தப்பெற்று 29—1—59 குருவாரத்தன்று மகாகும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருவிளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார்சுவாமி தேவஸ்தானம்:- இராஜகோபுரம், திருமதில், விமானம்

முதலிய பல இடங்கள் முழுவதும் திருப்பணி செய்து நிறைவேற்றி 2—2—59ல் இத்திருக்கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் செய்வித்தருளினார்கள் நம் கயிலைக் குருநாதர் அவர்கள். ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தையும் புதிதாகக்கட்டி 1—2—59ல் கும்பாபிஷேகம் செய்வித் தருளினார்கள்.


திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ் தானம் :- இத்திருக்கோயிலைப் புதுப்பித்து உத்தரவேதி தீர்த்தத்தை வெட்டிப் படித்துறை கட்டிச் சுற்றுக் கோயில்களைத் திருத்தித் தளவரிசையிட்டுத் திருப்பணி களை நிறைவேற்றி 15—7—57ல் கும்பாபிஷேகமும் நம் கயிலைக் குருமணியவர்கள் புரிந்தருளினார்கள்.

இவ்வாறே ஆதீனத்திற்குச் சொந்தமான திருக் கோயில்கள் பலவற்றிலும் திருப்பணிகள் புரிவித்துக் கும்பாபிஷேகம் நடத்தி வருகின்றார்கள் இக் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்.

சீகாழியில் சம்பந்தருக்கும், அம்பிகைக்கும் தங்கக் கவசமும், வேளூரில் வைத்தியநாதசுவாமி, வாலாம் பாள், ஆறுமுகக் கடவுளுக்குத் தங்கக் கவசமும், வள்ளலார் கோவிலில் தட்சிணாமூர்த்திக்குத் தங்கக் கவசமும், செய்யப்பெற்றுள்ளன. திருக்கடவூரில் கால சம்ஹாரமூர்த்திக்குத் தங்கக்கவசமும், அபிராமித் தாய்க்குத் தங்கக் கிரீடமும் செய்யப்பெற்றுள்ளன. வெள்ளி நாகாபரணங்கள் திருக்கடவூரிலும், பேரளத் திலும், குறுக்கையிலும், திருபுவனத்திலும் சீகாழியிலும்

செய்யப்பேற்றுள்ளன. கடவூர் சம்ஹாரமூர்த்திக்கும், திருக்குவளை தியாகராசர்க்கும், குறுக்கை சம்ஹார மூர்த்திக்கும், வேளூர் முத்துக்குமாரருக்கும் வெள்ளி மஞ்சம் அமைக்கப்பேற்றுள்ளது. சீகாழியில் வெள்ளி ரதம் இயற்றப்பேற்றுள்ளது. யாத்ரீகர்கள் விடுதிகள் வேளூர், கடவூர், சீகாழியில் அமைக்கப்பேற்றுள்ளன. ஆச்சாள்புரம், சீகாழி, வேளூர், கடவூர், திருக்குவளை, திருவாரூர் இராசன்கட்டளை, திருபுவனம், திருப்பனந்தாள், திருவையாறு, பேரளம், குறுக்கை ஆகிய தேவஸ்தானங்களிலும் திருமுறைப் பயிற்சி குழந்தைகளுக்குத் தரப்பேற்று வருகிறது.

இவ்வாறு பல பணிகளை மடாலயத்திலும் ஆதீனக் கோயில்களிலும் இயற்றி 25 ஆவது கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாட்சி புரிந்துவருகிறார்கள்.



தருமையாதீனக் குருமூர்த்திகளின்

அற்புத வரலாற்றுப் பாமாலை

கமலைஞா னப்ரகா சப்பெரியர் கருணையைக்
கைக்கொண்டு நிதிசெய் தருமைக்
கற்றவா தீனசந் தானகுரு வாகி யோளிர்
கலைஞான சம்பந்தசீர்
விமலவா னந்தபர வசர்சச்சி தானந்தர்
மிளிர்மாசி லாமணி மிகும்
வீரதவ ஞானசம் பந்தர்புக ழேறுதிரு
மேவுமவ் வரியபேயரோன்
அமலதிரு வம்பலவ ரழகியசிற் றம்பலவ
ரானதிரு நாவினரசர்
ஆதிசிவ ஞானமுனீ சச்சிதா னந்தருயர்
அரியமுத் துக்குமாரர்
சமலமறு ஞானசம்பந்தர்கந் தப்பரோடு
தவமாசிலா மணியர்பின்
சச்சிதான ந்தரேனும் சந்தான குரவரது
சரிதமதியம்புவோமே.

1. குருஞானசம்பந்த தேசிகர்

சீராரும் வில்லிபுத்தூர் தன்னிற் றேன்றித்
திருவால வாயினிடைச் சென்று நோற்று
நீராரும் சடைதரித்த சோக்க நாத
நிருமலனன் போடுகரத் தேய்தப்பேற்று
நேராக ஆலடியில் இரண்டு நாகம்
நேயமோடு படத்தைவிரித் தாடக் கண்டு
பாராரு மன்னவனுக் கருளேச் செய்து
பண்பினேடு கமலைநகர் படர்ந்து மேவி.

(வேறு)

படர்கருணை ஞானப்ர காசனருள் பெற்றுப்
பாங்காக வறுத்தளித்த பயற்றின் முளைகாட்டி
சுடர்விளக்கைப் பிடித்தவண்ணம் சோரிமழையி னின்
தோமறுதல் மேவியதிற் றேயாமற் செய்து [றும்
தொடர்வினையை ஒழித்தகுரு தூமொழிகைக் கொண்டு
துதிதரும புரமருவிச் சோகமற யார்க்கும்
அடர்பஞ்ச பாசங்கள் அகற்றியருள் புரிவோன்
ஆனதிரு ஞானசம் பந்தனடி பணிவாம்.

2. ஆனந்தபரவச தேசிகர்

நெறியாருந் தருமைநகர் தன்னிலருள் மேவி
நேயமுறு ஞானசம் பந்தனடி நேர்ந்தே
அறியாமை அறிவகற்றி அறிவதனி னுள்ளே
அறிவுதனை அருளினால் அறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்துமுத்தி தன்னிற்
பிறியாத சிவத்தோடு பேதமற நின்ற
பெரியவனும் ஆனந்த பரவசனைப் பணிவாம்.

3. சச்சிதானந்த தேசிகர்

அன்புடன் நின்னை யளித்தநல் லன்னை
ஆவியைக் கண்டிலன் எங்கே
பன்னுக வென்று பின்னவன் றன்னைப்
பரிவோடு வினவிட வவன்றான்

முன்னமே நின்றன் முண்டகத் தாளின்
முயங்குறச் சேர்த்துளேன் எனலும்
தன்னுள மகிழ்ந்த சச்சிதா னந்தன்
தாண்மலர் தலைக்கணி யாமால்.

4. மாசிலாமணி தேசிகர்

அருந்தவத்தான் முத்தியினை அன்னைதனக்களித்தும்
அரவத்தா லிறந்தவனுக் காவியினைக் கொடுத்தும்
திருந்துறுதம் மடிநிலையில் அருச்சித்த பூவைத்
திருமுறையேட் டின்மீது தெரிசிக்கச் செய்தும்
பொருந்துபுகழ்ச் சீரலைவாய்ப் புனிதனரு ளாலே
போதமிகு குமரகுரு பரமுனிவன் தன்னை
வருந்தும்வகை விளுத்தந்து மகிழ்ந்தடிமை கொண்ட
மாசிலாமணிமலர்த்தாள் வணங்கிமனமகிழ்வாம்.

5. ஞானசம்பந்த தேசிகர்

வையகம் புகழ் குற் றால மாமலையில்
வதிந்திடுபொழுதினில் ஒருநாள்
தெய்வவிவ் வரையி னருவியா லியன்று
சேர்ந்திடும் பீடிதம் என்னப்
பையவே சாற்றிப் பாவ விநாசப்
பதிக்கெழுந் தருளிய நந்தம்
சைவநற் குருவாம் ஞானசம்பந்தன்
றுடலைக் கணிகலம் ஆமால்.

6. திருஞானசம்பந்த தேசிகர்

வெய்யவனும் அயல்வழியை நினைந்தேக வுயர்வேலன்
விலங்கல் தன்னிற்
செய்யதிரு வள்ளியம்மை யில்லையோ வென்னவவள்
சிரத்தை நீட்டி
வையமறிந்திடவிருக்கின் றேனென்ற மொழிகேட்டு
மகிழ்ந்து நின்ற
துய்யவனுந் தருமைவரு திருஞான சம்பந்தன்
துணைத்தாள் போற்றி.

7. திருவம்பல தேசிகர்

அன்னையைப் பரத்திற் சேர்த்தரு ளுகவேன்
றடியவன் வேண்டிடக் கருவில்
அமர்ந்தவவ்வுயிரை அருளோடுபற்றி
அன்போடு முத்தியை யளித்தும்
பன்னருந் தருமைப் பதியினி லுற்ற
பதினொரும் ஒடுக்கத்தின் மேவிப்
பண்போடு ஞான நிட்டையி லிருந்த
படிக்காசு முனிவரன் றில்லை.

மன்னிய திரையின் மருவிய தீயை
மாண்போடு கசக்கியே அவிக்க
மதிமுடி தரித்து மன்றினி னடிப்போன்
வழங்கிய பிரசாத மதனைச்
சின்மய முள்ள தீட்சத ரளிக்கத்
திருக்கரத் தேந்தியம் முனிக்குச்
சிறப்புட னீந்த திருவம் பலவன்
திருவடிக் கன்புசெய் திடுவாம்.

8. அழகியதிருச்சிற்றம்பல தேசிகர்

கருப்பமே அடையாப் பேரிளம் பெண்ணை
காண்முளை வேண்டேன மறையோர்
விருப்போடும் அனுப்பப் பரிகலத் துற்ற
விழுமிய அன்னமோன் றுதவி
உருப்படு புதல்வ னுற்றிடச் செய்தே
உலகெலாம் போற்றவீற் றிருந்த
பருப்பத விளக்காம் அழகியசிற்றம்
பலவன தடியிணை பணிவாம்.

9. திருநாவுக்கரசு தேசிகர்

செய்யதிருப் புள்ளிருக்கு வேளூர் தன்னில்
செல்வமுத்துக் குமரன் சந் நிதியி லுள்ள
துய்யதிரை யவனருளால் விலகி நிற்கச்
சுந்தரஞ்சே ரறுமுகனைத் தொழுது போற்றி
மையலுறும் பரசமயத் துற்ரேன் றன்னை
மாண்புபெறு திருநோக்கா லடிமை கொண்ட
மெய்யவனுந் திருநாவுக் காசன் பாத
மென்மலரை மேன்மையுறச் சிரமேற் கொள்வாம்.

10. சிவஞான தேசிகர்

அருஞ்சித்தர் தமையழைத்து முத்தியினைக் கொடுத்தும்
அழகமைந்த மடந்தைதனை விருத்தையாய்ச் செய்தும்
பொருநோயன் தீர்த்தத்தின் முழ்கிடவே தீர்த்தும்
போற்றிமார் தீவர்த்தி பிடித்துவரச் சென்றும்

பெரும்பிரம ராக்கதந்தான் நீங்கவருள் செய்தும்
பின்சாண நீர்த்தெளிவை அருந்திவரக் கண்டும்
வரும்பிரம ராக்கதத்திற் கனுட்டான மளித்தும்
மகிழ்தருமைச் சிவஞான வள்ளலடி பணிவாம்.

11. சச்சிதானந்த தேசிகர்

கழுதுகண்படுக்குங் கங்குலில் வந்து
கடைத்தலை வாயிலிற் புலையனைப் போலக்
கடும்புசி யெனவே வளவனின் றரற்றக்
கருணையா லோதனம் கலந்துட னளித்தும்
குழுவோடு மடியர் சூழ்ந்திடக் குழகர்
கோடியிற் சென்று முழ்கிடக் கண்ட
கோதுறு நாத்திகர் வாதுகள் புரியக்
குணமுறு காட்சியெனும் பிரமா ணத்தாற்
பழுதுறு மன்னவர் தங்களை வென்றும்
பாலினி லாலங் கலந்தவரளிக்கப்
பரமனை நினைந்ததைப் பருகியே அந்தப்
பாமரர் தன்னடி பணிந்திடச் செய்தும்
வழுவிலாச் சைவத் திறத்தினைக் காட்டும்
வள்ளலார் தருமை சச்சிதானந்த
மகிபன்பொற் பாத மலர்களை நாளும்
வணங்கியும் வாழ்த்தியும் சென்னியில் வைப்பாம்

12. முத்துக்குமார தேசிகர்

இருக்குபுகழ் திருக்கானப் பேருர் தன்னில்
இனிமையுறும் அருணகிரி யென்னும் சீடன்
பெருக்கமுறு சந்தான விருப்பங் கொண்டு
பீடுபெறு மனைவியோடும் வந்து வேண்டத்

திருக்குலவு மடப்பளியிற் சிதைந்து வீழ்ந்த
சேம்மையுறு மன்னமோன்றை யளித்துக் கர்ப்ப
உருக்கிளரச் செய்த முத்துக்குமரன் சேம்போன்
உபயதிருவடிக்கமலம் உச்சிவைப்பாம்.

13. ஞானசம்பந்த தேசிகர்

செய்யுஉருத் திரகணிகை யேனே அழைத்தாள் என்னச்
சேப்பியடி தோழுதசிதம் பரநாத முனிக்குத்
துய்யவிடை கோடுத்தருளி வீற்றிருக்கும் போழுது
சோகமறும் அம்முனிவன் வேசிமனேக் கேகி
நையலிலாச் சிவயோக நிட்டையிலே யேட்டு
நாளிருக்கத் தாசிபயந் தடிபணிந்து புலம்ப
வையமேலாம் புகழ்ந்தேத்த வவரைவர வழைத்து
மனமகிழ்ந்த ஞானசம் பந்தனடி பணிவாம்.

14. கந்தப்ப தேசிகர்

கதியினே அளிக்கும் காசியின் மேவும்
கங்கையின் முழ்கிடக் கருதித்
துதிபுகல் மாசி லாமணி மூர்த்தி
தூண்டியங் கேகிட விடுத்து
நுதியுடைத் தருப்பை யுருவினே யங்க
நூண்முறையாட்டிடச் செய்து
பதியினின் மேவும் கந்தப்பமூர்த்தி
பதமலர் அனுதினம் பணிவாம்.

ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வேளிவருவது. சமய உண்மைப்போருள் முதலியவற்றைக் குறித்த தேளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பேருந்துணையாவது. கையோப்பத் தோகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 1—50 வெளிநாடு ரூ. 2—00

சேயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.